# விபூதி

சிறுகதைகள் 5

வித்துவான் ஆ.தா.ஆறுமுகம் B.A.

# விபூதி

சிறுகதைகள்

வித்துவான் ஆ.தா.ஆறுமுகம் பி.ஏ.

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா

# விபூதி

*சிறுகதைகள்*

## வித்துவான் ஆ.தா.ஆறுமுகம் பி.ஏ.

*முதலாவது பதிப்பு: 15.02.2009. வெலிங்டன். நியூஸிலாந்து*

*இரண்டாவது பதிப்பு: 10.04.2014 இளவாலை. இலங்கை*

*மூன்றாவது பதிப்பு: 01.07.2020 ஸ்காபரோ. கனடா*

**வெளியீடு:**

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்

கனடா

## ● அமரர் ஆ.தா.ஆறுமுகம்.



*அவர் புன்னாலைக்கட்டுவனில் பிறந்தார்.தெல்லிப்பளையில் வளர்ந்தார். இளவாலையில் மணந்தார்.*

*ஆசிரியராக அதிபராக சென்ற இடமெல்லாம் சிறந்தார். நியூஸிலாந்தில் வசித்தார்.*

*2015 ம் ஆண்டு தனது 90 ஆவது வயதில் உதிர்ந்தார்.*

வித்துவானும் கலைமாமணியும் அவரது அறிவுக்கு அழகூட்டிட வெள்ளை நிற உடுப்பு அவரது உருவத்துக்கு எழிலூட்டியது.

வெலிமடை நெல்லியடி சுழிபுரம் கலஹா ஒட்டுசுட்டான் தெல்தெனியா ஆகிய பகுதிகளை அவர் படிப்பித்தார்.

பிள்ளைகள் பல அவரால் நல்லபெயர் சூடப்பெற்றதில் உறவுகள் உவகையுற்றன. ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மண்டப மொன்று வித்துவான் ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை ஆறுமுகம் பி.ஏ. என அவரது பெயரை தனதாக்கி உயர்வுற்றது.

அவருடனான எனது உறவு எனது திருமணம் தந்தது.
அவருடனான எனது தொடர்பு எனது ஊர் தந்தது.

ஆலயங்களின் சிறப்புகளை அறிந்தவர்.அதனால் ஆலயங்கள் சிறக்க வேண்டும் என விரும்பியவர்.

கோவில்கள் பலவற்றில் உபயங்கள் பல புரிய அருள் பெற்றவர்.செய்தும் அருள் பெற்றவர்.

முருக பக்தர்.50 வருடங்களுக்கும் மேலாக கந்தஷஷ்டி விரதம் அனுஷ்டித்தவர்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஸ்தல யாத்திரை மேற்கொண்டு அறுவகை தரிசனங்களும் கைவரப் பெற்ற அருளாளர்.

ஊர் வாழவேண்டும் என அவர் கண்களை மூடி கைகளை கூப்பி பலமுறை பிரார்த்திப்பதும் அதனைப் பார்தவர்களின் இதயம் மலர்ந்து விரிவதும் ஊர் அறிந்தது.

சுதந்திரமான சிந்தனை.நேர்மையான செயற்பாடு.பரந்த மனப்பான்மை. சரளமாகப் பழகும் சுபாவம். அநாவசியமாக எதிலும் குறுக்கிடாதிருத்தல் என்பனவற்றை சமுதாயம் அவரிடம் கற்றது.

பொதுப் பணிக்கான எந்த முயற்சியிலும் முகம் வருந்திடாது ஆர்வமுடன் செயற்ப்பட்ட உயரிய குணத்தை சமுதாயம் அவரிடம் கண்டது.

*நண்பர்களையும் உறவினர்களையும் நல்வழிப்படுத்தும் சுபாவத்தால் மற்றவர்களது மனத்தில் கௌரவம் மிக்கவராக அவர் திகழ்ந்தார்.*

*நாலு பேருக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையால் மற்றவர்களது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராக அவர் வாழ்ந்தார்.*

*அதிபராக இருந்தவர்களுள் எளிமையாக நேர்மையாக வாழ்ந்தவர் ஒருவரைக் காட்டச் சொன்னால் எவ்வித தயக்கமுமின்றி பலரது விரல்கள் அவர் பக்கமும் நீண்டன.அதே போல இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழ்ந்து காட்டியவர் யார் என்று கேட்டதற்கும் பலரது கண்கள் அவரையே நாடின.*

*அன்பு கருணை பாசம் நேசம் இரக்கம் கனிவு மிகுந்தவராகவும் செருக்கு வீரம் கர்வம் திமிர் ஆதிக்கம் தெரியாதவராகவும் நெருங்கியவர்களுக்கு அவர் தோன்றினார்.*

*விண் பொறியாளராக பட்டம் பெற்று பேராதனை பல்கலை கழக பேராசிரியராக பதவி வகித்த அவரது மூத்த புதல்வன் இளமுருகன் வருத்தம் வந்து திடீரென மறைய அந்த வருத்தமே வருத்தியதில் அவரது மனைவி சிவஞானம்பிகையும் சிறிது காலத்தின் பின் காலமானார்.இளைய மகன் இளங்கோ அரச அலுவலராக நியூ ஸிலாந்தில் பணி புரிந்து அமரரானார்.*

*நியூ ஸிலாந்து சென்றபின்பும் முதுமையிலும் இளமைத்துடிப்புடன் கணணியை விருப்புடன் கற்று அதில் தேர்ச்சி பெற்று முயன்றால் எதனையும் முடிக்கலாம் எப்பவும் முடிக்கலாம் என்பதற்கு முன்னுதாரணமானவர்.*

*எதையும் தீவிரமாக யோசித்து நிதானமாக திட்டமிட்டு தெளிவாக செயல்படுத்தும் மதி நுட்பமும் விசாலமான சிந்தனையும் இலங்கையில் அதிபராக இலங்கிய அவரை நியூ ஸிலாந்தில் எழுத்தாளராக்கின.*

*சக்தி,வீட்டில் விஞ்ஞான விளையாட்டு,நம்மக்களின் மனக்கணக்கு, தமிழ் நொடிகள், தமிழ் பழமொழிகள், மனதில் மலர்ந்தவை, வீபூதி,*

*தங்கத்தாத்தாவின் சிறுவர்பாடல்கள், ஒரே மைய வித்தைச்சதுரங்கள், நியூ ஸிலாந்தில் தமிழன் பதித்த சுவடுகள் என பத்து நூல்களை மிக வேகமாக எழுதி தானே அச்சமைத்து தானே வடிவமைத்து ஆச்சரிய மூட்டியவார்.*

*தமிழ் நொடிகள், நியூ ஸிலாந்தில் தமிழன் பதித்த சுவடுகள் ஆகியவை கனடாவிலும் மீள் பதிவு பெற்றன. பத்திரிகைகளுடன் அவருக்கிருந்த நெருக்கம் விசாலமானது.பல தடவைகள் முகப்பில் படங்களும் உள்ளே குறிப்புகளும் வெளிவந்துள்ளன.*

*மருத்துவர்கள் அவருக்கு காலக்கெடு விதித்திருந்த நிலையிலும் புறநானூறு பற்றி தான் கற்றதை கற்பிக்கும் வேட்கை அவரிடமிருந்தது.மரணப்படுக்கையிலிருந்தும் புறநானூற்றில் புதுநானூறு காண விரும்பிய அவரது குரல் என்னுள் ஓங்கி ஒலிக்கின்றது.*

*சமூக சேவையில் அவருக்கிருந்த ஈடுபாட்டை அவர் வாழ்ந்த பகுதிகளின் பதிவேடுகள் பாதுகாப்பாகவிருந்தால் அடுத்த தலைமுறைக்கும் பெருமையுடன் எடுத்துரைக்கும்.*

- ***இளவாலை எஸ்.ஜெகதீசன்.***

1.விபூதி 1

2.கலையும் கனவுமே 8

3.முத்திரைச்செலவு 18

4.விளங்குமாறு 23

5.கைகழுவுவீர்களா? 29

# புகுமுகம்

எனக்கு சிறுகதைகளிலே ஈடுபாடு குறைவு: வாசிப்பது கூட அருமை. புகழ்பெற்ற எழுத்தாளர்களின் கதைகளை வாசித்திருக்கிறேன்; சுவைத்து நினைத்து நினைத்து மகிழ்ந்துமிருக்கிறேன்.

வெலிங்ரன் தமிழ்ச் சங்கம் 'தமிழ்த் தென்றல்' என ஒரு சஞ்சிகை வெளியிடுகிறது. நியூசிலாந்துக்கு வந்த காலத்தில் அன்பர்களின் விருப்பத்துக்கு இணங்கி யாழில் போர்ச் சூழலிற் பட்ட அவலங்களை மையமாக வைத்து 'கண்டறியாதன கண்டேன்' என, தொடர் கட்டுரை எழுதிவரலானேன். திருமதி சந்திரலேகா வாமதேவா இதழாசிரியப் பொறுப்பேற்றிருந்தார். அவர் தமிழ்த்துறையில் 'கலாநிதி' பட்டம் பெற்றவர். அவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமிழ்த் தென்றலுக்குச் சிறுகதை எழுதுமாறு கேட்டார். சிறுகதை எழுத அநுபவம் இல்லை எனத் தயங்கியபோதும் "உங்களால் முடியும்; எழுதுங்கள்" என ஊக்கப்படுத்தினார். அடுத்த கிழமையும் தொடர்புகொண்டு எழுதிவிட்டீர்களா எனத் துருவித் துருவிக் கேட்டார்.

அவருடைய ஆய்க்கினைக்காக 'விபூதி' என ஒரு கதை எழுதினேன். அவர் பாராட்டி இன்னும் எழுதுங்கள் என ஆக்கினை செய்தார். (ஆக்கினை- கட்டளை) தொடர்ந்து வேறு நாலு கதை எழுதினேன். அந்நிலையில் அவர் அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர நேரிட்டது. தமிழ்த் தென்றலும் சில மாதங்களாக வெளிவரமுடியாத நிலை ஏற்பட்டது. யானும் கதை எழுதாமல் இருந்துவிட்டேன்.

'மனதில் மலர்ந்தவை' என்ற கணினிப் பதிப்பில் இவை இணைக்கப் பட்டிருந்தன. அன்பர் சிலரின் கருத்துக்கிணங்கி இந்த ஐந்தையும் தனி நூலாக்கியிருக்கிறேன். இவை சிறு கதையா, குறுநாவலா எனவும் ஒருவர் கேட்டார். ஏதோ எழுதத் தூண்டிய சந்திரலேகா மகாதேவாவுக்கு மனமுவந்து நன்றி தெரிவிக்கிறேன்.

ஆ.தா. ஆறுமுகம்
15.02.2009.

# விபூதி

பொழுது விடிகிறது; வாழ்வும் விடியுமோ என்ற ஏக்கம் எல்லோர் மனதிலும் நிழலாடுகின்றது. அன்பர்கள் நண்பர்களைக் காணும்போது புன்னகை மலர முனைகிறது. ஆனால், உதட்டுக் கதவுகள் திறபடத் தயங்குகின்றன. உள்ளார்ந்த கவலைகள் இழுத்துப் பிடிக்கின்ற னவோ? ஆம். ஒன்றில்லை பல; பின்னியும், கொழுவியும் .

"உந்தப் பக்கத்திலேயும் விடிகிறது போலிருக்கிறது அம்மா"
"இல்லை யில்லை. உது மேற்கெல்லோ. அங்கே அரியாலையிலும் ஒரு ஆமிக்காம்ப் இருக்கிறதாம். அந்த வெளிச்சந்தான். இந்த வழித்தடை யையும் பக்கத்து ராணுவ முகாமையும் பார். பெரிய பல்புகள் போட்டிருக்கு. பகல் போல வெளிச்சம். இது மாதிரித்தான் அதுவும்."

"அப்பா, உந்த ஆறுதானே தொண்டைமானாறு. உதிலேதானே சனம் இடம் பெயர்ந்து ஆயிரக் கணக்காய் அள்ளுப்பட்டு வர, புக்காராப் பிளேன் சுட்டு ஆட்கள் தண்ணீரிலே விழுந்து கையிலே கொண்டு வந்த மூட்டை முடிச்சுகளும் ... ... "
"ஓமோம், யாழ். குடாநாட்டை இரண்டாகப் பிரிக்கிறது இந்த உப்பாறு. எங்கள் பக்கம் வலிகாமம். இந்தப் பக்கந் தென்மராட்சி. இந்த ஏழெட்டு மாதமும் பட்டதுபோதும். ஆமிக்காரன் சுட்டாலுங் காரியமில்லை. வெளிக்கிட்டுவிட்டோம். வீடு வாசல் கிடக்குதோ. ஷெல்லடியிலே .... கடவுளே"
"எட்டு எட்டரை செல்லும் பெரியவன்கள் வர. இப்ப என்ன ஐஞ்சரை தானே. பெட்டி, மூட்டை, முடிச்சுகளையுங் காவிக்கொண்டு நடந்தது .. .... கொஞ்சம் சரிவம்"

"ஓமோம், பிந்தினால், கியூ நீண்டுவிடும். அதுக்காக இரவிரவாக வெளிக்கிட்டது.மூட்டை முடிச்சுகள் ஒவ்வொன்றாகச் சோதினைமுடிய இரண்டு மூண்டு மணியாகும்; வெய்யில்; குழந்தைகள் பசியிலே குழறுங்கள்."

"இரண்டு மணிக்கெழும்பி நடந்தது. கொடிகாமம் நாங்கள் தங்கின வீடு நாலு கட்டை வரும். என்ன? களைப்பாயிருக்கு." உயிரைப் பிடித்துக் கொள்ள ஏதோ நிவாரணத்தைச் சாப்பிட்டது தானே.

"சோதினை முடிந்தால் பஸ் வருமட்டும் அந்தப் பக்கம் பனை நிழலிலேயாவது இருக்கலாம். இந்த மணல் வெளி வெக்கை. ... "

"ஊருக்குப் போனாலும் பனை நிழல்தான். நிலைக்காது. நிம்மதியாக இருக்க விடுவான்களோ ஆமிக்காரர். தேடுதல், ஐ சீ, யூ சீ, தலையாட்டி இப்படி எத்தனை எத்தனையோ... "

"தலையாட்டிகளும் பாவம். ஒருவரையாவது காட்டாவிட்டால் அவைக்கும் நல்ல அடியாம். "

"இரவல் வீடுகள், கோடிகளிலே எத்தனை நாளைக்கு இருக்கலாம். வெளிக்கிட்டாச்சு . என்னென்னவோ இன்னும் முருகா! இனிமேல் வீடு வாசலை விட்டு வெளிக்கிடுவதில்லை."

"சுட்டுத் தள்ளினாலும் காரியமில்லை . பட்டது போதும்."

"சுடுகிறதென்றால், பிள்ளைகளையுஞ் சேர்த்துச் சுடட்டும்."

"ஓமோம், இராமர் மராமரம் ஏழையும் ஒரே அம்பால் துளைத்த மாதிரி வரிசையில் விட்டு"

" இல்லை; இல்லை. கண்ணைக் கட்டி நிறுத்திவைத்திருப்போருக்கு முன்னுக்கு ஆமிக்காரரும் வரிசையாக நின்று சுடுவான்களாம்"

"குண்டுகள் ஷெல்லுகளுக்காகக் கண்டபடி விழுந்து கிடந்து பழகி விட்டது. மணல்தானே; படுக்கப்போறேன். பிள்ளை வாணி, இந்தப் பாயை விரிச்சுப் போட்டு அந்த மூட்டையிலே தலையை வைச்சுப்படு. கண்ணனும் வந்து அக்காவோடை படு. பெரியவன்கள் வருமட்டும்".

"போதுமடா சாமீ... போதும்." என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு உட்கார்ந்த என்வாயைக் கிளறினார்கள். ."சொந்தக் காரரையும் படித்தாச்சு; சிநேகிதரையும் அறிந்தாச்சு; நல்லூரிலே கண்டபோது, ஆமி வருமெண்டால் ஓடி வாருங்கோ. ஒரு அறை உங்களுக்கு என்று சொன்னான். பெரிய இடப் பெயர்விலே ஆளுக்கொரு உடுப்புப் பெட்டியும் சமையற் பாத்திர மூட்டைகளுங் கொண்டுபோய்

நிக்கிறோம். ஆட்களைக் கண்ட உடனே முகம் மாறிப் போச்சுது. பின்னுக்கும் நாலு பேரைக் கண்டதாலாக்கும்."

“மற்றவை யாரையா?

"அண்ணரின் மகளும் இரண்டு குஞ்சுகளும். விட்டிட்டு வர முடியுமோ? தாயும் மகளும் பிள்ளைகளும் அறையிலே படுக்கட்டும். நான் உந்த விறாந்தையிலே கிடப்பேன் என்றுதான் சொன்னேன். "

"எங்கடை அம்மாவுந் தங்கச்சியும் வரப் போகினமாம் நாளைக்கு மானிப்பாயாலை” என்று பெண்சாதி சொன்ன உடனே மூச்சுப் பேச்சில்லை மனிதன்."

"உந்தச் சண்டை சச்சரவுக்குள்ளே தந்தியாமோ தபாலாமோ வந்தது அவவுக்கு தாய் வருவதாக"

"அகதிகள் வந்திருக்கு. சாப்பாடு போடவேண்டுமே என்றாக்கும். "

"பெறாமகள் ரோசக்கண்டு. பெண்சாதியின் கதை கேட்டதும் விளங்கிவிட்டது அவளுக்கு. திரும்பி விட்டாள் பள்ளிக் கூடத்துக்கு. அகதிமுகாமெல்லோ பள்ளிக்கூடம். வந்தவழியிலே அவதானித்திருக் கிறாள். "

"வீடு வாசல் எல்லாம் பறி கொடுத்து வந்து களைத்தும் போனீர்கள். தண்ணீர் ஏதுங் குடியுங்கோ என்றாவது கேட்டவையோ பிறக்கிறாசியார்." என்று அகதி முகாம் நண்பர் மணியங் கேட்டதால் நான் அறிமுகமாகி விட்டேன் எல்லோருக்கும்.

"சும்மா குற்றங் குறை சொல்லக் கூடாது. கேட்டவ. உந்தத் தண்ணீருக்கு நின்றால், பள்ளிக் கூடத்திலும் இடமில்லாமற் போய்விடும் என்றபடி அம்மாவுந் திரும்ப, நானும் என்ன செய்யலாம் திரும்பிவிட்டேன். "

"உவைதான் மகளின்சாமத்தியச் சடங்குக்கு வரச்சொல்லி இரண்டு பேருமாக வந்து அழைச்சவை" பெண்கள் குழுவிலிருந்த மனைவி சொல்ல நான் திடுக்கிட்டுப் போனேன்.

"நாலு நாள் முன்னுக்கு வந்து நடத்தி வையுங்கோ எண்டெல்லோ கேட்டவை..." மகள்.

"அம்மா துரும்பாலை வெட்ட, அந்தப் பிள்ளை வீறு போட்டு 'லோட்' பண்ணுறா. அவதானோ அந்த ரோசக் கண்டு. தூரத்திலே இருந்தாலும் எங்கடை வம்பளப்புக்குக் காது கொடுத்திருக்கினம் "

"அது சரி … பிறக்கிறாசியார், பள்ளிக் கூடத்திலே வந்து கிந்து பார்த்தவையோ "

"ஓ அடுத்தநாள் மத்தியானம் ஒரு பார்சலோடு அவர் வந்தவர். அவரைத் தூரத்திலே கண்டதுந் தண்ணீர் கொண்டு வாறோம் என்று கழன்றிட்டினம் தாயும் மகளும். "

"நீங்கள் என்ன செய்தீங்கள்"

"நானும் ஓடுகிறதோ? அவைக்குங் கொடுத்துச் சாப்பிடுங்கோ என்று பார்சலை நீட்டினார். கடைப் பார்சல் என்று தெரிந்தது"

"அவர் கேட்டிருப்பர். மனுசி அகப்பைக் காம்பைத் தூக்கியிருக்கும் "

"ஆகப் பழி சொல்லக் கூடாது. எனக்கும் போடு; என் சிண்ணுக்கும் போடு என்று கேட்கப்படாதுதானே. அகப்பைக் காம்புப் பகிடியைக் கேட்க ஔவைார் பாட்டுத்தான் நினைவு வருகிறது"

"அதென்ன சொல்லுங்கோ பிறக்கிறாசியார். பொழுதுபோகட்டும். பெரியன்களையுங் காணோம்."

" இருந்து முகந்திருத்தி ஈரோடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப - வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தாற்
சாடினாள் ஓடோடத் தான். "

"நல்லது பிறக்கிறாசியாரையா. நல்ல ஆமி அடி விழுந்திருக்குப் போலை. கொஞ்சம் விளங்கப் படுத்தி விடுங்கோ."

"ஒரு நாள் ஔவையார் வழி நடந்த களைப்பில் ஒரு வீட்டுத் திண்ணையில் இருந்தாராம். வீட்டுக்காரன் ஒரு அப்பாவி. என்னைப்போல் என்று சொல்லுங்கோவன்" என்றபோது சத்தம் விழுந்துவிட்டது. அந்தப் பக்கமும் கடைக் கண்ணாற் பார்த்தார்.

" ஆ.. ஆ; பிறகு .. ?

“உள்ளே போய் மனைவிக்குப் பக்குவமாய் முகத்தைத் தடவி, ஈர், பேன் எல்லாம் எடுத்து ஆளைக் குளிரப் பண்ணிவிட்டு, ஔவைப் பிராட்டியார் விருந்தாளியாய் வந்திருக்குஞ் செய்தி சொன்னதுதான் தாமதம். பத்திரகாளிக்கு ஆவேசம் . மிச்சம் விளங்குந்தானே."

"முறம் என்றது சுழகு. பெண்களின் இரண்டாவது ஆயுதம். புறநானூற்றிலும் வருகிறது வீரத்தாய் ஒருத்தி புலியை - காட்டுப் புலியை- முறத்தால் அடித்துத் துரத்தினாளாம். ஒரு சொற்பொழிவிலே கேட்டேன்.”

"உங்கடை நண்பருக்கு மனச்சாட்சி குத்தியிருக்கு. கடையிலே வாங்கிக் கொண்டு வந்து சமாளிக்கப் பார்த்திருக்கிறார்."

" அவர் பார்சலை நீட்ட, நீங்கள் என்னையா செய்தீர்கள்"

"அதிருக்கட்டும். நீங்கள் சொல்லுங்கோ என்ன செய்திருக்கலாம்" என்று திருப்பி விட்டேன்

"இங்கே தொண்டர்படை எல்லாந் தருகினம். நீங்கள் கரைச்சற் படவேண்டாம். நானெண்டால் அப்படித்தான் சொல்லியிருப்பன்."

"கொண்டு வந்திட்டியள். உந்தக் குழந்தைகளுக்குக் குடுங்கோ."

"என்னசெய்ய? கொண்டுவந்திட்டியள் உதிலை வையுங்கோ எண்டுதான் மரியாதைக்காகச் சொல்லவேணும்"

"நல்லகதை; அங்கே சுளகு; இங்கே. . .”

"ஆ...ஆ... கப்ரின் வந்திட்டார். சோதினை தொடங்கப் போகிறது"

எல்லோரும் அவசரமாக எழுந்து வரிசையாய் நிற்கத் தொடங்கினர். அதிலுந் தில்லு முல்லு. இராணுவத்தினர் மிக மரியாதையாகச் சோதினை முடித்து அனுப்பினர். ஆயத்தமாக நின்றவாகனத்தில் ஏறிச் செல்லுகையில் மீண்டும் உரையாடல் தொடங்கிவிட்டது.

"போனமக்கள் வந்துவிட்டார்கள் என்று உலகத்துக்குக் காட்டிவிட்டு, பிறகு எங்களிலேதான் கெட்டித்தனங் காட்டுவினம். இப்ப போலி மரியாதை."

"நேற்று முந்தாநாள் போன ஆட்கள் அக்கம் பக்கமெல்லாஞ் சூறை யாடுகினமாம். "

"ஆமிக்காறர் அழிச்சது போதாதென்று ஊர்க்கள்ளர் உடைச்சுக் கிடைக்கிறதுகளை எடுக்கிறான்களாம் . "

யாழ்ப்பாணத்திற் போயிறங்கிய பின்னர்த் தங்கள் தங்கள் ஊருக்குப் போகும் பஸ் வண்டிகளை எதிர்பார்த்து நின்றனர். அடுத்த வீட்டுக் கந்தையா அண்ணர் எங்களைக் கண்டதும் ஓடிவந்து "எங்கடை மக்கள் பேரப்பிள்ளைகளும் வந்திருக்கினமோ? வழி கிழியிலே கண்டதோ?" என்று ஆவலோடு கேட்டார். தான் இரண்டுநாள் முந்தி வந்து விட்டாராம் வீடு வாயில் கூட்டித் துடைக்க. அவர்கள் நெருக்கடி குறையக் குழந்தைகளோடு வர இருக்கிறார்களாம்.

"ஆறுமுகம் அப்பு வீடு எப்பிடி அண்ணை இருக்கிறது? இளவாலை வீடு பறிகுடுத்திட்டுவர அந்த மகான் தானே நிழல் தந்தவர்." என்று மகள் குறுக்கிட்டுக் கேட்டார். கந்தையா அண்ணை சொண்டைப் பிதுக்கினார்.
"என்ன சாமான்களை அள்ளிப் போட்டான்களோ? "
"ஷெல் கில் விழுந்ததோ? "
ஆளையாள் முந்திக் கொண்டு கேட்டோம்.
"கிழக்குப் பக்கம் அப்பிடியே இருக்கு"
"அப்ப மேற்குப் பக்கம்? "
"கொஞ்சம் எரிஞ்சு போச்சு"
"நீங்கள் வெளிக்கிட, தம்பியவை வந்திருந்தவையாம். அடையாளங் கள் இருந்திருக்கும்."
எனக்கு ஐந்துங் கெட்டு அறிவுங் கெட்டுவிட்டது. கந்தையா அண்ணர் பண்பான மனிதர். பட்டும் படாமலுஞ் சொல்லியிருக்கிறார். ஐயையோ மேற்கறையிலேதானே புத்தகங்கள். சட்டப் புத்தகங்கள் போகட்டும். கோட்டுக்கு இனி நான் போகப்போவதில்லை. மற்றத் தமிழ்ப் புத்கங்கள்... ! என்னை அறியாமற் கத்தி விட்டேன்!

"என்ன பிறக்கிறாசியார், ஏங்கிப் போனியள் போலே. அங்கே உப்பிடி எத்தனை அழிவு."
"இல்லை கந்தையாண்ணை, பழைய சங்க இலக்கியங்கள்; இலக்க ணங்கள். பண்டிதர் சங்கரப்பிள்ளை, பண்டிதர் கதிரிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தனின் அருமையான கருத்துகள், இலக்கண வித்தகர் நமசிவாயம் கணேசையாவிடமிருந்து பெற்றுத் தந்த விசேட

விளக்கங்கள் எல்லாம் போச்சோ! இலக்கணப் புத்தகங்களில் அச்செழுத்துகளிலும் பார்க்க எனது கை எழுத்துக் குறிப்புகள்தான் வரிகளுக்கிடையிலும். விச்சுப் பரிகாரியாரின் சங்கரப்பிள்ளை ஆசிரியரின் சித்தாந்தக் குறிப்புகளும் போச்சோ" தலையைச் சுற்றிற்று. இருந்துவிட்டேன் தொலைக்காட்சித் திரையிற் சில காட்சி மாறிமாறி வருவதுபோல, கட்டுரைகள் எழுதவெனச் சேகரித்து வைத்த குறிப்புகள் மூடிய கண்ணுக்குள்ளே தோன்றின. அதையாவது கொண்டு வருவோம் என எடுத்து உடுப்புப் பெட்டியில் வைக்கக் கொண்டு வந்தேன். மனைவி துணி மணிகளை அடைந்து நிரப்பி விட்டார். ஆமிக்காரன் இவைகளைத் தொடான் என்றெண்ணி மேசைக்குள்ளே வைக்கப் போக கிட்டடியில் ஷெல் விழுந்து வெடித்தது. எங்கே போட்டேனோ நினைவில்லை.

வீட்டுக்குப் போனதும் நேரே ஓடினேன். அடையாத வாயிலகம் வரவேற்றது. ஒரே சாம்பல். மேலேயுங் கீழேயும் பார்த்தேன். எரிந்த குறைக் கூரை மேலே. எரிந்த கருகிய தளபாடங்களும் சாம்பலுங் கீழே! நாங்கள் வெளிக்கிட யாராவது அவற்றை ஏற்றிக்கொண்டு போயிருந்தாலுங் காரியமில்லை. ஆராவது அநுபவிப்பார்கள். அக்கினியில் அவமாய்... ...

கட்டுரைகள் குறிப்புகளின் நினைவு வரக் கீழே குனிந்தேன். முதலைக் கோவையின் இரும்புப் பாகம் உருகிக் கறுத்துக் கிடந்தது! காகிதச் சாம்பல். முழந்தாளிட்டுக் குனிந்து பார்த்தேன். நிறைந்து வழிந்த கண்ணீரில் மூன்று சொட்டுக் கீழே விழுந்தன. தாயார் இறந்தபோது காடாற்றிய நினைவு வந்தது.

ம்...ம்...ம் 'இது விபூதி. மேலான செல்வம்' என்றுதானே பொருள். மூன்று விரலால் தொட்டு நெற்றியிற் பூசினேன். நினைவுச் சின்னமாக வைத்திருக்க எரிந்து கருகிய பேழை ஒன்றையாவது அந்த அறைச் சுடுகாட்டிலே கண் தேடிற்று.

# கலையுங் கவருமே

அமைதிப்படை என்று வந்தவர்களுக்குச் சந்நதம் ஏறியபோது தெருக்கரை வேலிகளுக்கு நெருப்பு வைத்தனர். அவர்களைத் தொடர்ந்து வந்தவர்களுக்கும் யாழ்ப்பாணத்துத் தனித்தன்மையான வேலி பாதுகாப்பில்லையாம். முன்னையவர்களிடம் படித்தவற்றுள் இதுவும் ஒன்று. சில மாதமாக வேலி அடையாத வளவில் வாழ்ந்து பழகியும் விட்டது. எனக்கும் தெருவிற் செல்லும் வாகனங்களையும் மக்களையும் பார்த்துக் கொண்டிருப்பது ஒரு பொழுது போக்காகி விட்டது. எனக்கும் தெருவிற் செல்லும் வாகனங்களையும் மக்களையும் பார்த்துக் கொண்டிருப்பது ஒரு பொழுது போக்காகி விட்டது. சோழகம் பெயர்ந்துவிட்டது. மென்மையான தென்றல் வந்து மேனியைத் தீண்டியது. நல்லவெயில். வேப்பமர நிழலிலே சாய்மானக் கதிரையிற் சரிந்து புதினத்தாள் பார்த்துக் கொண்டிருந்தேன். செய்திபடித்து முடிந்தது. விளம்பரங்களைப் பாராமல் மடியிலே தாளை வைத்துவிட்டு நிமிர்ந்தேன். தெருவின் மறுபுற வளவில் மாமரநிழலில் தன் செல்வக் களஞ்சியத்துக்கு உணவூட்டிக் கொண்டிருந்த கலைவாணி என்னைச் சில ஆண்டுகளுக்கு முன்னைய நினைவில் ஆழ வைத்துவிட்டாள்.

"கும்பலிலே கோவிந்தா போடுவதுபோல சீதனம் வாங்காதே; சுரண்டிக் கொழுக்கும் பணக்கார முதலைகளை விரட்டு என்றெல்லாம் இளைஞர் போடுங் கூச்சல்களைக் கேட்டுச் சிரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இங்கே யாரண்ணை தவக்கைகள் என்றிருக்கினம். கொஞ்சம் மேடு பள்ளம் இருக்கிறதுதான். உலகத்திலே எங்கேதான் சமம் இருக்க முடியும். சமசமாசக் கட்சி என்று தம்பட்டம் அடித்து இளசுகள், ஏழை எழியதுகளை ஏமாற்றி வாக்கு வேட்டையாடினார் களே. கூடி நின்று கூப்பாடு போட்ட வால்களைப் பதவி கிடைத்தபின் திரும்பிப் பார்க்கவும் நேரமில்லையாம். முற்றவெளிக் கூட்டத்திலே தெற்கேயிருந்து வந்த பெரிய கையொருவர் மொழிச்சமத்துவத்துக்குப் போராடுவோம் என்று கையையுங் காலையும் போட்டாட்டினாரே.. அவர் ஆடி ஆடிப் பேசினது இப்பவும் கண்ணக்குள்ளே நிற்கிறது.

நெல்லியடிக் கந்தையர் வென்றது கட்சிக் கொள்கைக்காக அல்ல. விளங்குந்தானே. தமிழரிலே இனிமேலுந் தங்கள் பருப்பு அவியாதென்று தீர்மானித்து விட்டார்களாம். தெற்கே அமைந்த சூழ்நிலையில் மந்திரிப் பதவிகள் கிடைத்தன. தமிழரைப் பறந்தள்ளிய அரசியலமைப்பு வரைந்தது யாரண்ணே. இருந்த ஒரேயொரு சிறிய பாதுகாப்பு விதி 29 ஐக் கூடத் தயங்காமல் நீக்கியதுயாரண்ணே. "மொழி ஒன்று; நாடு இரண்டு. மொழி இரண்டு: நாடு ஒன்று." என்று பாராளுமன்றத்திலே சொனனவர்தானே. அது இருந்தால் தமிழர் யாராவது வழக்குத் தொடர்ந்து தங்களை வினைகெடுத்தி விடுவார்களாம். மற்றவர், கொம்மியூனிசககாரர் மந்திரியாகிய உடனே செய்த திருத்தொண்டு காங்கேசன் துறை முகத்தைச் சீர்திருத்திக் கொண்டிருந்த பெரிய இயந்திரங்களை யெல்லாம்உடனடியாகத் திருப்பிக் கூப்பிட்டதுதானே. இங்கே கூவிய தம்பிமார் சிலருக்கு நல்ல காற்சட்டை போடக் கிடைத்திருக்கிறதாம்." அவர் உணர்ச்சிவசப்பட்டுப் பேசிக் கொண்டிருந்தார். அடுத்தடுத்து வந்த பிரச்சினைகளுக்கிடையே நாங்கள் அவைகளை மறந்து விட்டோம். அந்த மனிதர் கந்தையர் ஒவ்வொன்றாக எடுத்து விடுகிறார். கொதி எங்கேயோ. விளங்குகிறது. குழப்பவும் மனமில்லை.

"தப்பித்தவறி மாறாக ஒரு கதை சொன்னாற் போதும். குழம்பிய குளவிகள் போல மொய்த்துக் கொட்டு கொட்டென்று கொட்டிவிடுவார் கள். தனக்குத் தான் வந்தால் தலையுங் காலும் வேறாகத் தெரியமண்ணை. சீதனம் வாங்கப்படாது என்று கொம்முனிசம் பேசிய எத்தனைபேர் சீதனப் பெண்களைத் தேடி உறுமீன் வருமளவும் கல்யாணமே வேண்டாம்; சமூகசேவை செய்யப்போகிறோம் என்று கூத்தாடினார்கள். உதெல்லாம் ஒரு வயதுக் கோளாறண்ணை. உவன் சுந்தரலிங்கத்தின்ரை இளையவன் என்ன செய்தவன்? ஒரு உறுமீனைப் பிடித்து, காதலோ கத்தரிக்காயோ என்று தொடங்கி, கல்யாணத்துக்கு நாள் பார்க்கப் போக ஆயத்தப்படும்போது சீதனப் பிரச்சினையை இரகசியமாகத் தொடங்கித் தாய் மூலம் வரைக்கறைவாய் வாங்கினது தெரியாதே. அதிலும் ஆகச் சிரிப்பு என்னவென்றால் தான் சீதனம் கேட்கவில்லையாம். தாய் தானாம் விடாப்பிடியாய் நின்றதாம். எழுத்துக்கு முதல் வீடு வளவு, வயல்

காணிகளையெல்லாம் பெண் பெயரில் நன்கொடையாக எழுதிக் காசு ஐந்திலட்சத்தையும் வங்கியில் நிலையான வைப்பிலிட்டுச் சான்றிதழை எழுத்துக்குமுன் ஒப்படைக்கச் சொன்னது தெரியாதே. அதிலும் பெரிய பகிடி என்ன வென்றால் வீட்டிற் சீவியங் கூடக் காட்டத் தேவையில்லை; முத்திரைச் செலவு கூடிப் போகுமாம். தனக்குக் கொழும்பிலேதான் வேலையாம். மாறிக் கீறி வர இயலாதாம். அதிலென்ன? மாமா மாமியவை இருக்கலாமாம். அழுங்குப் பிடியாக நின்றானாம். ஏன் தெரியுமே? அவர்கள் வீடு வாயிலைத் துடைத்துக் கிடைத்துத் துப்பரவாக வைத்திருப்பார்களெல்லோ. சமூகசேவையா ளரின் மறைமுக சுயநலம் எவ்வளவு நீளம் போனது என்று விளங்குகிறதுதானே. ஊரிலே கதையாகி விட்டது. இனி என்ன செய்வது என்று விட்டுக் கொடுத்தவையாம். போதாமலிருந்த ஒரு இலட்சத்துக்கும் எவ்வளவு பாடுபட்டார் முருகையர். காணிபூமி யையும் ஈடு வைக்க முடியாதெல்லோ. அந்த நேரம் பாவம் பார்த்து நீங்கள் உதவியிராவிட்டால் என்ன நடந்திருக்கும் அண்ணை. என்றெல்லாங் குத்திக் காட்டிக் கொண்டுவந்தவர் கடைசியிலே எனக்குங் குளிர வார்த்துவிட்டார்."

கந்தையரின் வாதத்தையும் இலகுவிலே புறந்தள்ளி விடலாகாது என எனது மனச் சாட்சி சொல்கிறது. இருப்பினும், "சுயநலவாதிகள் சிலரின் தந்திரங்களை வைத்துக் கொண்டுபொது உடைமைக் கொள்கையிற் குறை காணக்கூடாது" என்று அறிவுரை கூறத் தொடங்க, அவர் இடைமறித்து "கொள்கையைக் குற்றஞ் சொல்லவில்லை; கள்ளச் சாமிமார்போலக் கொள்கையை வைத்துப் பிழைக்கிறவர்களைத்தான் சொல்லுகிறேன்." என என்னை மடக்கி விட்டார். சும்மா சொல்லப்படாது. மகளுங் கலைமகள்தான்; கண் கண்டதைக் கை செய்யும்; காது கேட்டதை வாய் பாடும். நிறந்தான் கொஞ்சம் . . .

மகன் பகீரதனும் நல்ல முயற்சியாளன்; நினைத்ததை முடிப்பவன். பெயர்கள் மிகப் பொருத்தமாகத்தான் வைத்திருக்கிறார் தகப்பன். விவசாயம் படித்தவன். பகீரதனுக்குப் பல்கலைக் கழகஞ் சறுக்கிய

ரோசத்தில், வெங்காயச் செய்கையும் சிறு அளவில் முந்திரிகைத் தோட்டமுந் தொடங்கினான். புராணத்துப் பகீரதனுக்குப் போல இவனுக்குங் கடவுள் கை கொடுத்தார்.

எங்கள் வளவுச் சங்கடம்படலைத் திண்ணையில் முதியோர் சிலர் கூடிப் பலதும் பத்துங் கதைப்பது வழக்கம். நிலவென்றாற் கூடுவோர் தொகையுங் கூடும். எல்லோருங் கமக்காரர்தான். ஒரு அறுவை மருத்துவம் நிகழ்ந்தபின் நான் ஓய்வுபெற வேண்டியதாகிவிட்டது. கந்தையர் எனக்கு இரண்டு வயது இளமையென்றாலும் மகனுக்கு உதவியாக இயங்குகிறார். அவருடைய குடும்பத்துக்கும் அமைதிப் படைக்கும் முன்பின் தொடர்பிருக்கிறதோ தெரியவில்லை. குடும்பத்து முக்கிய நிகழ்வுக்கும் அமைதிப்படைக்குங் காலத் தொடர்பிருப்பது தெளிவு.

அமைதிப்படை வருவது பற்றிய பேச்சு வார்த்தை தொடங்கிய நாள் - கந்தையர் மருமகனை நிச்சயதார்த்தஞ் செய்வது பற்றிக் கதைக்க, சகோதரி வீட்டுக்குப் போனார். குழந்தைப் பருவத்திலிருந்தே பெற்றோர் சாணைகுத்தி வளர்த்திருந்தனர். பிள்ளைகள் விளையாடும்போது பகிடி பகிடியாகக் காதில் விழுமாறு சொல்வதும் உண்டு. பஞ்சாங்கமுங் கையோடு கொண்டு போனவருக்கு மருமகனின் கதை நெஞ்சிலே வேல் பாய்ச்சிவிட்டது. சும்மா மறுத்தாலும் பொறுத்திருப்பார். "உந்தக் கறுப்பியை நான் எப்படிக் கொழும்புக்குக் கூட்டிச்செல்வது அம்மா? குரங்கு மூஞ்சை மாதிரி." என்று உள்ளே தாய்க்குச் சொன்னது கந்தையருக்குக் கேட்டுவிட்டதாம். உடனே சொல்லாமற் கொள்ளாமற் கிளம்பிவிட்டாராம். கந்தையருக்கும் கலைமகள் பொன்குஞ்சுதானே. அங்கே நிகழ்ந்தது கேட்ட பகீரதன் எவ்வளவு பாடுபட்டு உழைத்தென்றாலும் நல்ல சீதனங் கொடுத்து உவனிற் பார்க்கத் திறம் மாப்பிள்ளை எடுக்கிறேனப்பா; கலங்க வேண்டாம் என்று சபதம் எடுத்தானாம். புதினத்தாள் வாசித்துக் கொண்டிருந்த என்னிடம் அழாக்குறையாகச் சொன்னார். ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்த பகீரதனின் சபதமும் பாண்டவரின் சபதமும் அடுத்தடுத்து நினைவு வந்தது.

அமைதிப்படை அடி வைத்தநாள் - பகீரதன் படித்தவன்; காற்பந்துக் குழுவின் தலைவன்; வாட்டசாட்டமான ஆண்பிள்ளை; மோட்டார் சைக்கிளில் அவன் செல்வதே ஒரு தனிக் கோலம். திருமணச் சந்தையை நாடும் பெற்றோரின் கண் அவனில் விழத் தொடங்கி விட்டது. தூரத்து உறவுக்காரர் விஸ்வநாதர் பகீரதனைக் கேட்டு நேரே வந்துவிட்டாராம். கந்தையர் தன் பிள்ளையுங் குமரிருக்கிறதே என்று சொன்னபோது, ஐம்பதினாயிரம் இனாந் தரலாமென்று ஆசை காட்டினாராம். இனாம் பேச்சு கந்தையருக்கு இனிக்கத் தொடங்கியது மட்டுமன்றி சிறகடிக்கவுந் தொடங்கி விட்டது. பகீரதனோ "பெண் வீட்டாருக்கு என்னை விற்கப் பேகிறீர்களோ? தங்கச்சி கல்யாணத்துக்கும் அவர்களின் சம்மதங் கேட்கவேண்டி வரும் அப்பா. தங்கச்சியின் கழுத்திலே தாலி ஏறினபின் தான் என்னுடைய கதை" என்று உறுதியாகச் சொல்லிவிட்டானாம். அவர் இருந்த கதிரைச் சூடு ஆற முந்தியே இன்னொரு பகுதி வந்துவிட்டதாம். அது கொஞ்சம் பசையுள்ளது. பகீரதனுக்கு விலை இரண்டு மடங்காகிவிட்டதாம். அன்றிரவு மற்றவர்கள் வர முந்தியே வந்து எனக்கு எல்லாக்கதையுஞ் சொன்னது மட்டுமன்றி மகனோடு என்னைக் கதைக்கச் சொல்லியும் ஒரு வேண்டுகோள் விடுத்தார். இரண்டாவது பகுதி இன்னுங் கொஞ்சங் கூட்டியுந் தருவார்கள் என்ற நம்பிக்கை கந்தையருக்கு இருந்தது. வாங்கிய இனாமைக் காட்டி மகளுக்கு நல்ல மாப்பிள்ளை எடுக்கலாமென்பது அவருடைய உள்நோக்கம். உவ்வளவு பணம் வைத்திருப்பவர்கள் ஏன் உத்தியோக மாப்பிள்ளை தேடாமல் இந்த மண்கிண்டியை நாடுகிறார்கள் என்ற கேள்வி என் மனதைக் குடைந்துகொண்டிருந்தது. பகீரதனைச் சாதாரணமாக மண் கிண்டி என்று நினைப்பது பெருந் தவறுதான். மேலைநாட்டுக் கமக்காரர் பற்றி வாசித்திருக்கிறேன். இவனும் எல்லாம் இயந்திரவேலை. மற்றவர்களும் வந்து சேர்ந்தபின், தன்னுடைய மகனுக்கும் மவுசு வந்துவிட்டது என்று காட்ட, சுற்றிச் சுழன்று வந்து சம்பந்தக்காரரின் கதையைச் சொல்லிவிட்டார். "ஊருக்குள்ளே நல்ல உழைப்புக் கார மாப்பிள்ளை; தங்கள் பிள்ளையுங் கண்ணுக்கு முன்னேயிருக்கும்; தங்களையுங் கடைசிக் காலத்திலே பார்க்கும்; வெளிநாட்டு மாப்பிள்ளையென்று ஆசைப்பட்டால், மரண அறிவித்தலிலே ஜெர்மனி. . . மாமனாரும் . . . என்றெழுதும் பாக்கியந்தான் கிடைக்கும்.

அங்கே மாப்பிள்ளை என்ன செய்கிறாரென்று தெரிந்தவர்கள் சிரிப்பார்கள். என்றதற்காகக் கேட்கவர உச்சிக் கொப்பிலே நிற்கிறார் என்று போகும்போது தனக்குக் கேட்கக்கூடியதாகச் சொன்னார்களாம்" இந்த விபரங்களை வஞ்சகமில்லாமற் சொன்னாரோ, சங்கடம்படலைச் சங்கத்தை விளம்பரக் களமாக்கினாரோ தெரியவில்லை. ஆனால் சீதனம் பற்றிய விவாதம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது.

"சீதனம் வாங்கக்கூடாது என்று எல்லாச் சமூக நிறுவனங்களும் ஏற்றுக் கொண்டிருக்க நீங்கள் கடும்பிடியில் நிற்கலாமா?"என்று கைலாயர் விவாதத்தைத் தொடக்கி வைத்தார்.

"ஓமோம், பெரிய டாக்குத்தர் எஞ்சினியர்மார்தான் இலட்சக்கணக்காக மேசையிலே வை என்று நிற்கிறார்கள். கடன்பட்டுங் கொடுப்பார்கள்... மற்றவர்களுக்கென்றால் . . . . . "

"எங்களைப்போலப் பெண்பிள்ளை பெற்றவர்கள் இறால் போட்டென்றாலுஞ் சுறாப் பிடிக்கத்தானே வேண்டும். தங்கள் பிள்ளை சீருஞ் சிறப்புமாய் இருக்கவேண்டுமென்று நினைப்பது தவறோ? "

"பணம் பண்டம் இல்லாதவர்களின் பிள்ளைகளுக்கு வாழ்வு வேண்டாமோ?"

"வடிவானபிள்ளை என்றாற்கொத்திக் கொண்டு போய்விடுவான்கள். மற்றதுகளுக்குச் சீதனத்தைக் காட்டியாவது மருட்டத்தானே வேண்டும்."

"அது சரிதான். வடிவு, படிப்புக் குறைவான பிள்ளைகளுக்குச் சீதனமொரு குறைநிரப்பி"

"குலம், குணம், அழகு, படிப்பு, சீதனம் இவையெல்லாம் வண்ணாத்திப் பூச்சிகளுக்கு . . "குணத்தை எப்படியண்ணை கண்டுபிடிப்பது? வீட்டிலிருக்கும்போது அலங்காரமாக, அடக்கமாகக் கதைப்பார்கள். களத்திலே விட்டுப்பார்த்தால்தான் உள்ள குணம் வெளியிலே வரும். பெயரைச் சொல்லமாட்டேன். கணவனைக் கைக்குள் போட்டுக் கொண்டு பெற்று வளர்த்துக் கொடுத்த மாமிமாரை மதிக்காத- கடைசிக் காலத்திலே திரும்பியும் பாராத 'பிந்தி வந்தவர்களைப்' பார்த்திருக்கிறீர்கள்தானே."

"சம்பந்தர் வழி மாறிப்போகிறார். அவருஞ் சரிதானண்ணே, சீதனத்துக்காகச் செய்கிறவன் அன்பு பாசமாயிருக்கமாட்டான்."

"உதை நான் ஏற்கமாட்டேன்; சீதனத்துக்கு ஆசைப்பட்டு வருங் குடிகாரரைப் பொறுத்த அளவிற் சரியாக இருக்கலாம். எல்லோரையும் அப்படி மதிக்கப்படாது"

" அழகும் எத்தனை நாளைக்கு? "

"அழகு பார்க்கிறவரும் எத்தனை நாளைக்கு?"

"இருக்கிறதைக் கேட்கலாம்; பிள்ளைக்குத்தானேயென்று பெற்றாருங் கொடுக்கலாம்."

"அங்கேதான் பிழை இருக்கிறது; கேட்கத் தொடங்கினால், ஆசைக்கு எல்லையிராது; அடுத்த சகோதரங்களுக்கும் விட்டுவைக்காமல் முழுதையும் வறுகப் பார்க்கிறான்கள்."

" இவ்வளவு மேசையிலே வை என்றல்லவோ பிடிக்கிறான்கள்."

" தன்னையும் ஒருவன் இருபதிருபத்தைந்து ஆண்டில் இத்தனை இலட்சம் வை என்று கேட்பான் என்று நினைப்பதில்லையே இந்த மாப்பிள்ளைச் சைலொக்குகள்"

"அவனுக்கும் வேறு பெண் சகோதரம் இருந்தால் என்னசெய்ய? இனாம் வாங்கியாவது .. "

"வந்திட்டார் கந்தையாண்ணை; மற்றவர்களின் இனாம் காசிலே திறம் மாப்பிள்ளை எடுக்க வெட்கமில்லை . . . . ? வந்தவள், தந்தவள் சும்மா இராள்"

"ஓமோம். அப்படி வாங்கினால் வந்தவள் தக்க தருணங்களில், காலத்திற் குத்திக்காட்ட மாட்டாளோ? "

ஜீப் வெளிச்சந் தெரிய எல்லலோரும் பின்னுக்குப் போய் மறைந்து விட்டார்கள்.

கந்தையருக்கும் மற்றவர்கள் சொன்னதுஞ் சரி; மகன் சொல்வதுஞ் சரியெனப் பட்டது.

பாடுபட்டு உழைத்துத் தன் பிள்ளைக்குத் தன்னாலியன்றதைக் கொடுக்கவேண்டும். அதுதான் முறையும், மரியாதையும். தானும் மகனுடன் கூடமாட நின்று கமவேலையில் முழுதாக ஈடுபட்டார். கடவுளுங் கண் விழித்தார். வெங்காயம், மிளகாய் பயிரிட்டவன் முந்திரிகைச் செய்கையுந் தொடங்கினான். முயற்சி மெய் வருத்தக் கூலி தருந்தானே. கிளிநொச்சியில் நல்ல வயல் விலைக்கு வர,

கொஞ்சங் கடன்பட்டு வாங்கினான். போய்வரும் வசதிக்காக மோட்டார் சைக்கிளொன்றும் வாங்கினான். கந்தையர் அந்நாள் முதல் "கடன்பட்டார் நெஞ்சம் போற் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற கம்பன்வாக்கை மந்திரமாகப் போற்றினார். பகீரதன் கிளிநொச்சிக்குப் போனால் கந்தையர் தோட்டம் பார்ப்பதில் முழுமுச்சு. பகீரதனுக்கு ஊரிலே மதிப்பு வளரத் தொடங்கிவிட்டது. அவனுக்குச் சகோதரியுந் தன் சபதமுந்தான் கனவும் நனவும். பகீரதனுக்கு ஏனோ உள்ளுராட்சித் தேர்தலிலும் ஆசை வந்துவிட்டது. பெண் பிள்ளைகளை வைத்திருந்தவர்கள் முழு ஆதரவளித்தனர். அதேவேளை எதிர்ப்பும் வளரத் தொடங்கியது. புதுப் பணக்காரன், முதலாளி வர்க்கம் என்றுகூடச் சொல்லத் தொடங்கி விட்டனர் சிலர். அதனாலேதான் கந்தையரும் இடதுசாரிகளைக் குத்திக் குதறுகிறார் என்ற எண்ணம் வேப்பமர நிழலுக்கும் வந்து விட்டது.

அமைதிப்படை கப்பல் ஏறிய நாள்- கந்தையரின் மகளும் உண்மையிலே கலைமகள்தான். ஓவியம், சித்திரத்தையல், கைப்பணி எல்லாவற்றிலும் வலு சூரி. மேலுங் கானக் குயில். அவள் படித்த கல்லுரி அதிபர், அவளுடைய திறமைகளைப் பயன்படுத்த விரும்பி, தொண்டர் ஆசிரியையாகப் பணி புரியக் கேட்டார். கொஞ்சம் மினுக்கமும் வரும் என்ற எண்ணத்திற் பகீரதனும் சம்மதித்தான். கிராம முன்னேற்றச் சங்கம் ஏற்பாடு செய்த கிராம உற்பத்திப் பொருட் காட்சியில் நாலில் ஒரு பங்கு இடம் கலைமகளின் பொருள்களுக்கு. கிழமை இறுதியில் கலைப்பொருள் உற்பத்தி வகுப்பு நடத்த முன்னேற்பாடு அந்தக் கண்காட்சி.

கண்காட்சியைத் திறந்து வைக்க வந்தவர் உதவி அரசாங்க அதிபர். பொருள்களை ஒப்புக்குப் பார்த்துக் கொண்டு வேகமாக வந்தார். கலைமகளின் பகுதிக்கு வந்தவரை அங்கிருந்த பொருள்கள் நுணுகி நுணுகிப் பார்க்கச் செய்துவிட்டன. கடதாசிகளை ஒட்டிச் செய்த யானை ஒன்று அவர் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. "உருட்டிப் பாருங்கள்" என்றார் சங்கத் தலைவர். உருட்ட வாலுந் தலையும் ஆடும்; யானை மீதிருந்த பாகனின் கை மாறி மாறி ஒரு சிறு மேளத்தை அடித்தது. யப்பான் விளையாட்டுப் பொருள்போல

ஏதாவது சாவி இருக்கிறதா எனப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். இத்தகைய பெருள்களைச் சங்கம் உற்பத்தி செய்தால் சந்தைப் படுத்தலுக்கு உதவுவதாகக் கூறினார். ஓவியப் பகுதியில் "அம்மா" என்ற தலைப்பிலிருந்த ஓவியம் எல்லோர் மனத்தையுங் கவர்ந்தது. பார்வையிலேயே தாயன்பு பளிச்சிட்டது. இதற்குத் தலையங்கம் போடத் தேவையில்லையே என்றவர் நிமிர்ந்தபோது சுவரில் இருந்த "கலைமகள் படைப்புகள்" என்பது கண்ணிற் பட்டது. இவ்வளவும் ஒருவருடைய ஆக்கங்களா என வியந்தவர், "இந்தப் பிரமா இங்கு இவ்வூரவரா?" என்று கேட்டபோது தலைவர் கலைமகளைக் கூப்பிட்டு அறிமுகப் படுத்தினார். ஓவியத்தைப் பாரட்டியவர் யானையை மீண்டும் எடுத்து மேளம் எப்படி அடிக்கிறது என அறிய விரும்பினார். "சில்லு அச்சிலிருந்து இரண்டு கம்பி உட்புறமாக இருக்கின்றன" என்று நாணி நாணி விளக்கங் கொடுத்தாள். மின்கலமும் இல்லையா என வியந்து குழந்தை மாதிரி அதை இழுத்து இழுத்துப் பார்த்தார். அவர் ஒரு கலா ரசிகர் என்பது புலனாயிற்று.

கூட்ட முடிவிற் கலைமகளைக் கூப்பட்டு அக்கலைப் பொருளகள் பற்றி உரையாடினார். இடையிற் குடும்பம் பற்றி விசாரித்தபோது தனக்குத் தூரத்து உறவு என்பதையும் விளங்கிக் கொண்டார். அவருடைய ஆராய்வும் அவள் கையைப் பிணைந்து கொண்டு நாணிக் கோணி மறுமொழி சொன்னதும் அயலில் நின்றவர்களின் கண்ணைக் குத்தத் தொடங்கிவிட்டது. அயலவர்களின் சிறப்பு, பெருமைகள் எங்களிற் சிலருக்குப் பொறுப்ப தில்லைத் தானே.

மிகுந்த பாசாங்குத்தனமாக பகீரதனுடைய காதிலும் - கொஞ்சம் பொடியும் வைத்து - போட்டுவிட்டனர். ஒரு குமர்ப்பிள்ளை இப்படி பொதுஇடத்தில் நின்று பிறருடன் கதைப்பது ஊருக்கே அவமானமாம். வீட்டுக்கு விரைந்தான். தங்கையைக் கூப்பிட்டான். உடுப்பு மாற்றிக் கொண்டிருந்தவள் வரச் சிறிது காலந் தாழ்த்திற்று. தனக்குக் கிடைத்த பாராட்டுகளைச் சொல்லி மகிழ நினைத்து ஓடி வந்தவள் விசுவாமித்திரரைக் கண்டதுங் கலங்கிப் போனாள். கை கால் பதறத் தொடங்கிவிட்டது. சீவியத்திற் காணாத கோலம்! பழிக்கதை அவனுடைய நெஞ்சிற் குமுறிக் கொண்டிருந்தது. தகப்பனாரையும்

அவளையும் மாறி மாறிப் பார்த்தான். அவளைப் பார்த்ததும் தாயில்லாத் தங்கையில் வைத்திருந்த பாசம் முந்திக் கொண்டி ருந்தது. ஏச வாய் திறந்தான். வார்த்தையே வர மறுத்துவிட்டது. அறிவோ, அவள்மீது வைத்திருந்த பாசமோ நாவை அடக்கி வைத்துக் கொண்டிருந்தது. "சரி, நீ போ; எல்லாம் ஆறுதலாகக் கதைக்கிறேன்." என்று சொல்லிவிட்டு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தான். "என்னடா, சங்கதி?" என்று கந்தையர் கேட்க ஒன்றுமில்லை என்பதுபோலத் தலையாட்டினான். படலை தட்டுஞ் சத்தங் கேட்டு வாயிற் கதவைத் திறந்து பார்த்தான். பெரிய தகப்பனாரைக் கண்டதும்" வாருங்கோ, வாருங்கோ பெரியப்பா" என்றான். கந்தையரும் எழுந்து சென்று வரவேற்றார். வந்தவர் "பிள்ளையின் சாதகத்தைக் கொண்டு வாருங்கோ. ஏஜீயே கேட்கிறார்" என்று சொல்லிக் கொண்டே இருந்தார். தகப்பனும் மகனும் ஆளையாள் பார்த்தனர். பகீரதனுக்குக் கொதித்துக் கொண்டிருந்த உள்ளம் திடீரெனக் குளிர்ந்தது. என்ன நிகழ்ந்திருக்கக்கூடும் என்பது அவனுக்குப் புலனாயிற்று. " ஆனைவிழுந்தான் பிள்ளையாரே" என்று திசை நோக்கித் தொழுதான். பக்தி வெள்ளங் கரைபுரளத் தொடங்கிவிட்டது. சாதகம் எடுக்க உள்ளே சென்றவன் வெகு நேரமாக வரவில்லை. பார்க்கச் சென்ற தகப்பன் வந்து "படத்துக்கு முன்னாற் சாதகத்தை வைத்துவிட்டு அழுதழுது கும்பிட்டுக் கொண்டிருக் கிறான்." என்றார். தமையனார் புன்னகையோடு "ஆனந்தக் கண்ணீராக்கும்; அவசரமில்லை; நல்லாய்க் கும்பிடட்டும்; " ஏஜீயே, கூட்டம் முடிய எங்கள் வீட்டுக்கு நேரே வந்துவிட்டார்; அவர் தனியாள்தானே; கலைமகள் கொடுத்து வைத்தவள்; கூரையைப் பிய்த்துக் கொண்டு வந்துவிட்டது அதிட்டம்"



நியூசிலந்து வடதீவின்கிழக்கில்Gisborne குக்கிட்ட உள்ள Papakorito நீர் வீழ்ச்சி.

# முத்திரைச் செலவு

95 ஒக்டோபர் முப்பதின் வலிகாமப் பேரிடப் பெயர்வுக்குப்பின் (exodus) மீண்டு வந்தோம். எங்கள் பக்கத்தில் படையினர் அதிகம் அழிவு செய்யவில்லை. முதலில் வந்த ஊர்க் கள்ளர் தான் பிய்த்துப் பிடுங்கினார்கள். குப்பையாய்க் கிடந்த வீடு, பற்றைக் காடாகிவிட்ட வளவுகளைக் கொஞ்சங் கொஞ்சமாகத் திருத்துவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். கூலி கொடுக்கக் கட்டாது. ஒரு நேரத்துக்குச் சம்பளம் நூற்றைம்பது ரூபாவாம். குற்றஞ் சொல்லப்படாது; உந்த அறாவிலைக்குச் சாமான் சக்கட்டு வாங்கக் கூலிக்காரனுக்குங் காசு வேண்டுமே. பாண்டவர்கள் சூதிலே தோற்று பதினாலாண்டு வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாத வாசமும் (ஞா- அறிதல், யாரும் அறியாதவாறு- இனங்காணமுடியாத வகையில் வாழுதல்) செய்தனராம். வலிகாமத்தார் இரண்டாய்ப் பிரிந்து அநுபவித்தார்கள். தவறு; அநுபவிக்கிறார்கள். பாண்டவர் சூதுப் போரில் தோற்றனர். நாங்கள் சுதந்திரப் போரில் முற்றாய்த் தோற்கவில்லையே; சிறு பின்னடைவுதானே. ஒரு பகுதியினர் வன்னியில் வனவாசம்; மறு பகுதியினருக்கு வடமராட்சியும் தென்மராட்சியுந்தான் விராடபுரம். இன்றைய துரியோதனாதியரும் வனவாசம் போனாலும் விடமாட்டோம் என்று படை அனுப்புகிறார்கள்; வன்னியிலே நல்லாய் வாங்கிக் கட்டுகிறார்கள். ஆனாற் பட்டினி போடுகிறார்களே அங்கே. தலையாட்டிகளைக் கொண்டு அடையாளங் காணப் பார்க்கிறார்கள் இங்கே. அகப்படுவது அப்பிராணிகள் தான். அருச்சுனாதியர் நழுவி விடுவார்கள் அவர்களின் வாலைப் பிடிக்க முடியாது. அரைகுறை ஆட்கள் சிலவேளை அகப்படுவதுண்டுதான். அதுவுந் தாக்கப் போன இடத்திலேதான். அஞ்ஞாத வாசம் முடிந்து வந்து நட்ட தென்னம் பிள்ளைகளுக்குக் கண்ணுக்கிருட்டோடு எழும்பிக் கூடு கட்டத் தொடங்கினேன்; களைப்பாயிருக்கிறது. 'அப்பாடா' என்று சாய்மானக் கதிரையிற் சரிந்தேன். மகள் தந்த தேநீருக்குச் சீனி கொஞ்சங் குறைவாயிருந்தது. அது என்னை அறுபது ஆண்டு முந்திக்

கொண்டுபோய் விட்டது. தொட்டுத் தொடர்ந்து பழைய வாழ்வு சினிமாப் படம் போல மனத்திரையில் ஓடத் தொடங்கிற்று.

கொல்லங்கலட்டிக் கிராமத்தின் நெஞ்சகம் போலிருப்பது வீரகத்திப் பிள்ளையார் கோயிலடி. தென்மேற்கு மூலையிலே ஒரு தனி அறையிலே கந்தையா அண்ணையின் கடை. பன்னிரண்டு சதத்துக்கு வீசந்துலாம் சீனி - (ஒன்றே முக்கால் இறாத்தல்) வாங்கிக் காதடைக்கச் சீனி கரைத்துக் குடிப்பது நினைவு வந்தது. தெற்கு எங்கள் விளையாட்டுக் களரி. தென்கிழக்கே வீதியை அடுத்து அக்கிராமத்துப் பல்கலைக் கழகம். ஆம். இலக்கண இலக்கியங்கள், சமயம், சங்கீதம், நாடகம், நடனம். ஆங்கிலமும் ஒரு பாடஞ் சொல்லிக் கொடுக்கிறார்கள். மேற்கு வீதிக்கும் தீர்த்தக் கேணிக்கும் இடையாக அம்பனைத் தெரு. வடமேற்கிற் புதிதாக ஆரம்பித்த நூல்நிலையம். இது இளைஞருக்கு. கேணி வாயிலுக்கு அண்மையாகப் பெரிய வாகை மரம். வாயிலருகில் ஒரு ஆவுரோஞ்சு கல்.* அக்கேணி வாயிலடியில் தினமும் பி.ப. நாலுமணிவரையில் முதியோர் சிலர் வந்து கூடுவது வழக்கம். தெருவழியிற் செல்வோர் தோளிற் சால்வை எடுத்து அவர்களுக்கு மரியாதை செய்வர். அங்கே பலதும் பத்தும் பேசப்படும். இரண்டு மூன்று கிராம முறைப்பாடுகள் அவர்களின் சமுகத்துக்கு வந்ததுண்டு. ஆயினும் பஞ்சாயத்துத் தரத்தை அடைய முடியவில்லை. காரணம் 'சுண்டி எடுத்த வேளாளர்' என்ற நிலையிலே தம்மை வைத்துக் கொண்டமையே. அவர்களைப் புறஞ் சொல்பவர்களும் இதைப் பட்டமாகச் சொல்லிப் பழிப்பர். அங்கே பெரும்பாலும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வது அண்மையிற் பொருந்திய அல்லது நிகழ்ந்த திருமணங்களில் மாப்பிள்ளை

---

- மேய்ச்சற் பசுக்கள் இறங்கித் தண்ணீர் குடிக்க வசதியாக கிணற்றின் ஒரு பக்கத்தில் தண்ணீர் மட்டம் வரை 20 மீற். நீளமளவு சரிவாக வெட்டப்பட்டது கேணி எனப்படும். வெயிலில் மேய்ந்த மாடுகள் தண்ணீர் குடித்தபின் உடம்பில் ஏற்படும் அழற்சி நீங்க உரோஞ்சுவற்காக, வாயிலில் ஒரு மீற்.றருக்குங் கூடிய உயர மான உருளைக்கல் நட்டு வைப்பார்கள். இதுதான் ஆவுரோஞ்சுகல். பக்கத்திலே ஒரு சுமை தாங்கியும் இருப்பதுண்டு.. வழி நடப்போர் தலைப் பாரத்தை அதில் வைத்துவிட்டு ஆறுதலெடுப்பர். முற்காலத்திற் பணக்காரர் செய்யும் புண்ணியங்களில் ஒன்று இது.

பகுதியோ பெண்பிள்ளை பகுதியோ கூடிய சாதிக்காரர் என்பதுவே. (ஒரு குலத்துக்குள்ளேயே, ஒருதென்னையின் குலைகளிலேயே, உயர்வு தாழ்வு காண்பர். சகோதரர்களே தாம் போன வழியின் உயர்வு தாழ்வு காரணமாக உண்பனவு தின்பனவு இல்லாதிருப்பதுண்டு. இக்காலத்தில் அருகி வருகிறது. )

பேரனாருக்குத் துணையாக வந்த நான் விளையாட்டுத் தோழர் வந்துசேராமையால், முதலில் வருபவனுடன் 'நாயும் புலியும்' விளையாடுவதற்காகக் கேணி வாயிற்படியில் சுண்ணாம்புக கல்லாற் கோடு கீறிப் பதினைந்து நாய்க்கும் மூன்று புலிக்குங் காய்கள் எடுத்து வைத்துக் கொண்டு காவலிருந்தேன்.

நொத்தாரிசர் வரும்போதே "உவன் முருகேசனுக்கு ஒரு பெண்பிள்ளை பிறந்திருக்கிறதாம்" என்று சொல்லிக் கொண்டே வந்து ஆவுரோஞ்சு கல்லிற் சார்ந்தார்.
"இந்த வயதிலையோ ?"
"அவனுக்கென்ன நாற்பது வயதுதானிருக்கும்"
"கொழும்பிலே முந்தின மகளுக்குப் பெடியன் பிறந்துபோன கிழமை மட்டிலேதான் துடக்குக் கழிவு வந்திருக்கும். சாதகங் குறித்துத் தரச் சொல்லிச் சாத்திரியாருக்கு நேற்றுக் கடிதம் வந்ததாம். பெடியன் மூல நடசத்திரமாம். ஆண்மூலம் அரசாளும். "
"முருகேசனுக்கு வீட்டுக்குப் பக்கத்திலே கொழுந்துத் (வெற்றிலை) தோட்டமும் சுன்னாகத்திலே இரும்புக் கடையும் அதற்கு நடந்து போகிற வழியுந்தான் தெரியும். "
"ஓம், முதலியார் . அவனுக்குப் பூமி பார்த்தார் என்று தானே பட்டம். "
"ஓமோம். அக்கம் பக்கம் பார்ப்பதுமில்லை ; தலை நிமிர்வதுமில்லை. "
"என்ன உடையார், எதிரே வருகிறவர்களைக் காலைப் பார்த்துத் தான் விலகுவானோ? "
"ஆகப் பகிடி பண்ணப் படாது. மிதித்த இடத்துப் புல்லுஞ் சாகாது. நல்லவன். "
"இரும்புக் கடையிலேயும் சம்பளம் பிழையில்லையாம். "

"மாதச் சம்பளம் அப்படியே அடுத்தநாள் வட்டிக்குக் கொடுத்திடுமாம் மனிசி.

அவசர தேவைக்காரர் பின்னேரமே போய்க் காத்திருப்பர். "

"கடும் வட்டி வாங்கப் படாதென்று மனைவிக்குச் சட்டமாம் முருகேசு"

"முருகேசன் துலாவிலே; மனிசி மிதியிலே; மகள்-இப்போது கொழும்பிலே இருப்பவள்-தண்ணீர் கட்டு. சீவியத்துக்குக் கொழுந்து வரும்படி போதுந்தானே."

"வேறு தோட்டக் காணிகளும் ஆறேழு. குத்தகைக் காசும் வட்டி உழைக்கும்."

"ஒரு இலட்சத்துக்குக் கிட்ட உருளுகிறது."

"அது தானே சிங்கப்பூர்ச் செல்லையரும் சீதனஉறுதிக்கு நொத்தாரிஸ் சம்பளம், முத்திரைச் செலவு ஆயிரக்கணக்கில் என்பதற்காக ஒன்றுங் கேளாமற் குழந்தைப் பெட்டையை மகனுக்கு எடுத்தவன். ஒரே ஒரு பிள்ளைதானே. வேறு எங்கே போகப் போகிறது என்ற எண்ணம். வேறென்ன தங்கையின் பிள்ளை என்று இரங்கியோ? "

"ஓமோம். மருமகளுக்குப் பதினாறு வயதும் வராது. மகன் உத்தியோகமாகும் வரை பார்த்துக் கொண்டிருந்தான். முதன் முதல் லீவிலே வரக் கல்யாணத்தையும் நடத்தி விட்டான்"

"பெட்டையுந் தாயைப் போல நல்ல வடிவானவள். அதுதானே பெடியனும் மறுபேச்சில் லாமல் ஓமென்றான். "

"உங்களுக்குத் தெரியாது. பின்வீடுதானே. சொத்துப்பத்திலே கண் வைத்துச் சின்ன வயதிலேயே 'சாணைகுத்தி' வைத்திருந்தார் செல்லையர். பிள்ளைகளுக்கும் விளங்கத் தக்கதாகச் சோடி கட்டிப் பகிடி பண்ணுவார் "

"ஏன், மனிசியும் ஒத்துத் தான். காசைக் கண்டால் ஆர்தான் விடுவினம். "

"இப்போது மகனோடு கொழும்பிலே இருக்கிறார் செல்லையர்."

"இரண்டு இடத்திலே அடுப்பு மூட்டுவது அநியாச் செலவாம். அதுதான் ஒரே இடமாய்ப் போயிருக்கிறான் செல்லையா. "

" ஒரு பகிடி தெரியுமோ உங்களுக்கு. செல்லையா சிங்கப்பூரிலிருந்து வந்தபோது மற்றச் சகோதரியின் பெடியன்களிரண்டும் தெல்லிப்பளை

ஸ்ரேசனுக்குப் போனான்களாம். றெயிலிருந்து இறங்கிவர, பெரிய உடுப்புப் பெட்டியைப் போட்டர் தூக்கினானாம். செல்லையர் வேண்டாம்; வேண்டாம் என்றாராம். போட்டர் உழைக்க வந்தவன் விடுகிறானோ? செல்லையா கத்தக் கத்தக் கொண்டுபோய் வண்டியிலே வைத்து விட்டானாம். அருக்கித் துருக்கி ஐம்பது சதங் கொடுத்தாராம். மருமக்களுக்குச் சணற் பேச்சாம். மூத்தவன் நேரே வீட்டுக்கு அடித்துக் கொண்டு வந்து விட்டானாம் ரோசத்திலே. இளையவன் பாவம். வண்டில் விட்டுக் கொண்டு வந்தானாம். "

"உப்பிடிப் பட்டவருக்குக் கொழும்புச் செலவு?"

"உங்களுக்கு ஆளைச் சரியாக விளங்கவில்லை. வீட்டை விட்டு வெளிக்கிட்டால் எல்லோ. "

"இவ்வளவு நாளும் தங்கச்சியார் கர்ப்பவதி என்று தெரியாதோ? "


"முத்திரைச் செலவு என்று கடிதம் எழுதுகிற பழக்கம் இல்லை இருபகுதிக்கும்." "தங்கச்சியாருக்கும் மகளோடு போட்டியாக வயிறு காட்டியது வெட்கமாயுமிருக்கும்"

"கேள்விப்பட்டாற் காசோடு தூங்குகிற செல்லையாவுக்கு நித்திரையும் வராதே!" "நித்திரையோ? கழன்றாலுங் கழன்றுவிடும். சீதன உறுதிச் செலவைப் பார்த்து . . .

இப்ப சொத்திலே பாதி "

"ஏன். பறக்கிறது என்று சொல்லுங்கோவன்."

எனக்குங் கூட்டாளிமார் வந்து விட்டார்கள்.



மியூசிலந்தின் தென் தீவிலிருக்கும் குக் (Mount Cook) பனிமலை.
செம்மரி ஆடுகளிற் சில மேய்வதையுங் காண்க.

# விளக்குமாறு ?

உள்ளங் குமுறும் போதெல்லாம் இந்தக் கடற்கரைதான் சரணாலயம். பிற்றோனிக் கடற் காற்று இதமாக இருந்தது. தண்ணீரும் உள்ள நாள் முழுவதும் அலைந்துகொண்டே இருக்கிறதே! தானும் அலையும் தன்னை அணைந்தவரையும் அலைக்கும். கடற்கீழ் நிலமும் நடுங்குவதுண்டன்றோ! நியுசிலாந்து அயலிலும் கடற்கீழ் நிலநடுக்கம் ஏற்படுவதுண்டாம். அப்போது என்மனம்போற் கடலுங் குமுறு மாக்கும். கடந்த பெருமழையில் ஹட் நதியில் அள்ளுண்டு வந்து, மல்லாந்து கிடக்கின்ற ஒரு பெரு மரத்துண்டத்தில் அமர்ந்திருந்தேன். 'ஓரினப் பறவைகள் ஒருமித்துக்கூடும்' என்றொரு ஆங்கிலப் பழமொழியும் உண்டன்றோ. அதுவும் என் இனப் பறவையே! கடலலை இடையிடையே வந்து காலைத் தழுவின. கவலைப்படாதே; காலம் மாறும் என்ற கருத்திற் போலும். என்மனம் அங்ஙனங் கருதத் தூண்டுகிறது. இங்கு வந்து ஆண்டிரண்டாகியும் கடல் தாவிவந்து வேலை தேடுகிறேனா? வேலை தேடுபடலம் படிக்கிறேன். ஆம். வேலை தேடுவதும் ஒருகலை. அநுமான் சீதையைக் கண்டு பிடித்துவிட்டான். நான்..?. வேலை எனவும் ஒரு பெயர் பெற்றுப் பரந்து விரிந்து கிடக்கின்ற இக்கடல்தான் வேலை தேடும் எனக்குச் சிறிது நிம்மதி அளிக்கின்றது. அடிக்கடி இங்கே வருவது வழக்கம். ஆயினும், அன்று கடையிலிருந்த கச்சான் பையிற் கண் விழுந்தது. என்று மில்லாமல் அன்று வாங்கினேன். ஏனென்று எனக்கு விளங்கவில்லை. இனந்தெரியாத தூண்டல் அது. கண்டேன்; எடுத்தேன் காசு; வாங்கினேன் கச்சான். அந்நிகழ்வை நினைக்கும்போது கவிச் சக்கரவர்த்தியின் 'எடுத்தது கண்டார்; இற்றது கேட்டார்' என்று என் மனம் பாடும். மகா அலெக்சாந்தரின் 'வந்தேன்; கண்டேன்; வென்றேன்' என்ற கூற்றும் கூடவே வரும். கச்சானில் இரண்டோ மூன்றை எடுத்து வாயிற் போட்டேன்.

"உமக்குக் கல்வித் தகுதி அதிகமாயிற்றே" என்று யான் அனுப்பிய விண்ணப்பத்தைப் புரட்டிப் பார்த்தவாறே அந்த அதிகாரி கூறினார். அதனுடைய உட் பொருள் விளங்காமல் மனதுக்குள் இரண்டு படி

ஏறிவிட்டேன். குலதெய்வம் பிள்ளையாரையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தேன்." "மன்னிக்கவேண்டும். உங்கள் தராதரத்துக்குத்தக்க வேலை எம்மிடம் இல்லை" என்று சொன்னபோது மலையிலிருந்து தள்ளிவிட்டதுபோல நெஞ்சிலே ஒரு கூச்சம். நியூசிலாந்துக்கு வரும்போது விமானந் திடீரெனத் தாழ்ந்தபோதும் இப்படித்தான் இருந்தது. முன்னைய பயணங்களில் அங்ஙனம் ஒன்றும் நிகழவில்லையே. அது ஏதுந் துர்க்குறியோ என்று அம்மாவுடன்பழகிய மனம் பேதலித்தது அன்று. ஏன் இன்றுந்தான். ஏதோ வளியமுக்கத் தாழ்வாம். நியூசிலாந்துக்குக் கிட்ட வரும்போது இடைக்கிடை ஏற்படுவதுண்டாம். விண்ணப்பத்திலே தகுதிவிபரம் இருக்கிறதே! கூப்பிட்டு வைத்துத்தான் சொல்லவேண்டுமா? திரும்பும் போது மனம் இலங்கை வாழ்வை மீட்டுக் கொண்டிருந்தது.

இங்கே நான் வந்திருக்கத் தேவையில்லை. அன்று இளந் தமிழ்ப் பெடியன்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போனார்களே! விசாரணைக்காகக் கால் கடுக்கக் காத்திருந்தேனே. நான் செய்த குற்றம் - இல்லையில்லை - பெற்றோர் பிரபாகரன் என்று பெயர் வைத்தது குற்றமாம். நான் அலுவலகத்துக்கு அன்று செல்லாததால், நிலைமையை ஊகித் துணர்ந்த ஜெயசூரியா, என்னிடந் தொழிற்பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த லொக்கு பண்டாராவை ஐம்பது ரூபா கைச்செலவுக்குக் கொடுத்து அனுப்பினாராம். பண்டார, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி என்றெல்லாம் பொலிஸ் நிலையங்கள் தடவி அலுத்து வெள்ளவத்தையையும் எதற்கும் பார்க்கலாம் என்றெண்ணி வந்தாராம். சனக் கூட்டத்திலே என் தலை தெரிந்ததாம். உயரமாக வளர்ந்ததிலும் ஒரு நன்மை இருக்கிறது தான். பண்டாரா வாயிலாக விஷயம் அறிந்த ஜெயசூரியா பொருத்தமானவர்களுடன் உடனே தொலை பேசியிற் கதைத்தும் சறுக்கல் மறுமொழிதான் கிடைத்ததாம்.. அவர் வங்கியில் மீட்டுக் கொடுத்ததுதான் உடன்பலன் தந்ததாம். அன்றிரவு நிரப்பிய நியூசிலாந்துக் குடிவரவுப் பத்திரங்கள்தான் என்னை இங்கே கொண்டு வந்தன. இங்கு வரும் எண்ணம் இல்லாமல் இருந்த எனக்குப் புத்திமதி கூறியதோடு நில்லாமல், தன் நண்பர் ஒருவரிடமிருந்த பத்திரங்களை ஓடோடிப்போய் வாங்கி வந்து கூட இருந்து நிரப்பு வித்தானே

நண்பன் நடராசன். என்னையறியாமல் அவனிலே ஒரு செல்லக்கோபமும் வரத்தான் செய்தது. எனக்கும் அடிமனதிலிருந்த வெளிநாட்டாசை நடராசா மூலந் தொழிற்பட்டது என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நியூசிலாந்துக்குக் குடிவரத் தெரிவானது புள்ளி அடிப்படையிலேதான். என்றாலும், விடுதலை யாக்கிய கடன், விண்ணப்பம், பயணம் என்பவற்றுக்கு.... எனது உழைப்பில் வாங்கிய வயல் ஈடு வைத்தும் போதாமையால் பெற்றவளின் கழுத்தில் 'பவுண் கோட்டிங்' தொங்கத் தொடங்கியது.. இங்கே 'டோல்' மிகக் குறைவு என்றாலும் தந்ததில் மிகச் சிக்கனமாக வாழ்ந்து மிச்சம்பிடித்துக் கொஞ்சங் காசு அனுப்பினேன். உடுபுடைவை வாங்குவதற்காகப் பட்ட கடனையாவது தீர்ப்பதற்காக. யாழ்ப்பாணத்துக் குணம்! அந்தக் காசு பெரிதும் விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது போலும். வந்த கடிதங்களிலிருந்து விளங்கு கிறது. அக்கவுண்டன் என்று அம்மா பெருமையாகப் பேசுவதுடன் வெளிநாட்டு உத்தியோகத்தன் என்று கனப்பு மெத்தியுமிருக்கும். ஊரிலே அரச உதவிப் பணத்தைப் பிச்சைக்காசு என இழக்கமாகச் சொல்லுவர். எனக்கும் முதலில் வெட்கமாகத்தான் இருந்தது. நான் என்ன, உழைக்கும் ஆற்றல் இல்லாமல் அந்தப் பிச்சையை வாங்குகிறேனா? என்னுடைய சி.ஐ.எம்.ஏ., சாட்டேட் சான்றிதழ்களைப் பார்த்துத்தானே வரச் சொன்னார்கள். கூப்பிட்டது மாதிரி வேலை தந்திருக்கவேண்டும். தந்த டோலிலே வேலைக்கு விண்ணப்பித்த முத்திரைக்காசு ஒரு தொகை. அது என் குற்றமல்லவே என மனச் சாட்சியைச் சமாளித்துக் கொள்ளுகிறேன்.

திருமணப் பேச்சும் மும்முரமாம். கடிதங்களை வாசித்தபின் பதிலெழுதிய நான் 'தான் போக மாட்டாத மூஞ்சூறுக்கு .....' என்று எழுதிவிட்டேன். பின்னர் அதை வெட்டினேன்தான். சில நாளில், அப்பாவின் விபரமான கடிதம் ஒன்று வந்தது. வேலாயுதர் வீட்டார் மாற்றுக்கு மாறாகச் சம்பந்தங் கேட்கிறார்களாம். மகள் மகாலட்சுமி பொறியியல் இறுதி ஆண்டுத் தேர்வு அடுத்த கிழமையாம். தமையன் பல்லு டாக்குத்தராம். யாழ்ப்பாணத்துக்கு மாறி வந்திருக்கிறாராம். எனக்குச் சாதகம் நல்ல பொருத்தமாம். தங்கச்சிக்கு அறுபது வீதந்தானாம். என்றாலும், நல்ல தாலிப் பொருத்தமாம். ஆனால்,

கையிலே மடியிலே ஒன்றும் இல்லையாம். பிள்ளைகளின் படிப்புக்குச் செலவாகிப் போய்ச்சுதாம். அம்மாவுந் தன் கைப்பட மகாவைப்பற்றி நாலு வசனம் எழுதி, தங்கச்சிக்கு வலிய வருவதை விட்டால், பிறகு என்ன மாதிரியோ என்று முடித்திருந்தார். முன்னர் மூஞ்சூறுக்கேன் விளக்குமாறு என்று எழுதிய அதே கைதான் தங்கச்சிக்காகச் சம்மதிப்பதாக எழுதிற்று. வரும்போது பயணஞ் சொல்லப் போனபோது கண்ணிற்பட்ட மகா அடிக்கடி அகக் கண்ணிற் புகுந்து நெஞ்சிலிடம் பெறத் தொடங்கிவிட்டாள். விஷ்ணுவின் நெஞ்சில் மகாலட்சுமி வாழ்வதாகச் சொல்வதும் இது போன்றதோ!

சிங்கப்பூரில் ஒரு வேலைக்குக் குறித்த தகுதி சிறிது குறைவா யிருந்தபோதும் விண்ணப்பித்ததற்கும், நேர்முகத் தேர்வுக்காகப் போய் அம்மா அப்பாவைப் பார்க்க என்று ஊருக்குப் போனதற்கும் காரணம் 'மகாக் காந்தந்தான்' போலும். திருமணப் பதிவும் நிகழ்ந்தது. கையோடு கூட்டிக்கொண்டும் வந்துவிட்டேன். இப்போது விண்ணப்பச் செலவு இரண்டு மடங்கு.

ஆங்கிலப் பயிற்சிக்கு என்று ஆறு மாதம் வீண் அலைச்சல். புதிதாய்ப் படிப்பொன்றும் அங்கேயில்லை. உச்சரிப்புத்தான் வித்தியாசம். சொன்னால் மற்றவர்கள் நம்புவார்களோ? எங்கள் ஆங்கிலம் இலக்கணச் சுத்தமானது. படிகள் பல ஏறினேன். மகாவுக்காகவும் ஏறினேன்; 'சீ.ஐ.எம்.ஏ.'என்றேன்; 'பட்டயக்கணக்காளன்" என்றேன். "கணனிப் பயிற்சி உண்டா" என்றார்கள். ஆமென்றவுடன் "நியூசிலாந்து அனுபவம் உண்டா" என்றார்கள். ஆளை மடக்குவ தற்குத்தான் அப்படிக் கேட்கிறார்கள் போலும். எனக்காகப் பரிதாபப்படுவது போலிருந்தது முகபாவம். நல்ல ஆதரவான, நம்பிக்கை ஊட்டுங் கதை. பல நேர்முகத் தேர்வு அனுபவம். துணிந்து சொன்னேன். "பயிற்சியாளனாகவும், பின் சீ.ஐ.எம்.ஏ. காரனாகவும் ஆறு ஆண்டு வேலை அனுபவம் உண்டு. இங்கே இரண்டு ஆண்டு வேலை தேடிய அனுபவம் உண்டு. சம்பளம் இல்லாவிட்டாலும் அநுபவத்துக்காக தொண்டனாக வேலை செய்யவுந் தயார்." அதிலே தொனித்த எரிச்சலை அவர் நிச்சயமாக உணர்ந்திருப்பார். எனினும் மிக அமைதியாக "உங்கள் தொலை பேசி எண் என்ன" என்றார்.

எனக்குப் பால் வார்த்தது போலிருந்தது அப்போது. நம்பிக்கையோடு படியிறங்கிய நான் இரண்டு மூன்று நாளாகத் தொலைபேசிக்கு அண்மையில் வாழ்ந்தேன். தொலைபேசி மணிச் சத்தங்கேட்டதும் ஆவலோடு எடுத்தால் ஏமாற்றந்தான். யாராவது நண்பர்களின் அழைப்பாக அவை இருக்கும். எடுத்தபோது எழுந்த எரிச்சலை உரையாடிய நண்பர்களும் இனங்கண்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இங்கே தொழில் வழங்குவோரின் குணம் இது தானாம். நீங்கள் வேலைக்கு வரும்போது உங்கள் மோட்டார் வண்டியை இன்ன இடத்திலே நிறுத்தலாம் என்றுகூடச் சொல்லுவார்களாம். ஏமாற்றத்துடன் திரும்ப விடுவது பண்பல்ல என்ற கொள்கையாம். இலவம் பழத்துக்குக் காவலிருந்த கிளியாக்கலாமாக்கும். எவ்வளவுதான் படித்திருந்தாலும், எனது தோல்...... இசை மன்னன் மைக்கேல் ஜாக்சனைப் போலக் கோடிக்கணக்காக வைத்திருக்கி றேனா நிறம் மாற்ற...? நேற்றுவந்த கடிதம் மனக்கண் முன் விரிந்தது. அன்று, என்னை மீட்டெடுத்த பண்டார தான் எழுதியிருந்தார். நான் முன்பு செய்தது போலத் தானும் சீ.ஐ.எம்.ஏ. மாணவருக்குச் சனி ஞாயிறிற் கற்பிக்கிறாராம். ஜயசூரியா தனது நல்லெண்ணங்களைத் தெரிவிக்கச் சொன்னாராம். திரும்பவும் மனம் இலங்கையில்.... அவர் எனக்களித்த தேநீர் விருந்தில், "எங்கள் கதவு உங்களுக்கு என்றுந் திறந்திருக்கும். வெளிநாட்டு அநுபவம் சேர்ந்தால் எங்கள் கம்பனி அதிஷ்டம் பெற்றதாகி விடும்" என்று சொன்னதும் கை தட்டல் ஓயச் சில விநாடி பிடித்தது. உண்மையிலேயே அவருக்கு என்னிற் பிரியம் அதிகம். என்னைவிட என்வேலைத் திறமைதான் அவரைக் கவர்ந்தது. இந்நினைவோடு, மகாவை அங்கே வேலைக்கு வருமாறு கடிதம் வந்திருப்பதாக அப்பா சென்றகிழமை எழுதி யிருந்ததும் நினைவில் வந்தது. அதனோடு, "என்ன இருந்தாலும் எங்கடை பச்சைத் தண்ணியைக் குடிச்சிட்டுக் கிடக்கலாம்" என்று அப்பா சொன்னது கடலோசையையும் வென்று கொண்டு காதில் ஒலித்தது. காணி பூமியைப் பார்க்க மேய்க்க ஆளில்லையே என்ற கவலை அவருக்கு. ஒன்றிரண்டாகப் போட்டுக், கையில் எஞ்சியிருந்த ஆறேழு கடலையையும் ஒருமித்து வாயிலே திணித்தேன் மரச் சிங்காசனத்திலிருந்து குதித்தேன்; விரைந்தேன் வீடு நோக்கி. ஓடினேன் என்று கூடச் சொல்லலாம். வீட்டுக்குக் கிட்ட வர, எமது

பேரனார் பாடுகிற பாட்டொன்று சந்தர்ப்பம் உணர்ந்து போலும் நினைவுக்கு வந்தது.

" பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போட உப்பில்லை என்பார்க்கும் குற்றித் தைத்த
காலுக்குத் தோற் செருப்பில்லை என்பார்க்கும் கனக தண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லை என்பார்க்கும் விசனம் ஒன்றே"

பாட்டை முணுமுணுத்துக் கொண்டு வீட்டுக்குட் புகுந்ததும் தொலைபேசியில் விமானச் சீட்டுத் தரகருடைய எண்களை அழுத்தினேன். கொழும்புக்குத் திரும்பும் முடிவான எண்ணத்துடன். அந்த மனிதன் யாருடனோ அலம்பிக் கொண்டிருக்கிறாராக்கும். வேறிடத்திலே தொடர்பு என்ற குறிப்பொலி (என்கேஜ் ரோண்). அடுத்த முறை எடுக்கக் கை நீட்டினேன். பின் கதவைத் திறந்து கொண்டு வந்த மகா "காயப் போட்ட துணிகள் எடுக்கப் போனேன். எனக்கு வேலை கிடைத்திருக்கு. கடிதம் அங்கே மேசையிலே!" இருண்டிருந்த மனத்திலே பூரண சூரியகிரகண முடிவில் வருகின்ற வெளிச்சம்! அன்றைய கடிதத்தில் விட்ட குறை, அதாவது தான் போக மாட்டாத மூஞ்சூறுக்கு விளக்குமாறு என்று எழுதத் தொடங்கி வெட்டியதும், நினைவில் வந்தது. ஆமாம் என் மகா விளக்குமாறுதான். உதய சூரியன் என்றுஞ் சொல்லலாமே! இல்லை அது பௌதீக இருளைத்தான் போக்கும்; இவள் பௌதீக இருளையும், மன இருளையுமல்லவா போக்குகிறாள். டோலிலும் மிச்சம்பிடிப்பதற்காக ஒரு மின்குமிழ்தான் எரியவிடுவோம் வேளைக்கு நித்திரைக்குஞ் செல்வோம். இது வரையில்; அதுதானே குப்பையாய்க் கிடக்கும் வீடு வாசலை விளக்கும் மாறு! இருண்டு கிடந்த என் மனதையும் விளக்கி, ஒளி மூட்டிய மாறு. ஒரு பெயர்ப் பிரச்சினை. விளக்குமாறா மகாலட்சுமியா? மாறினால் விளக்கி மூத்தாளை அகற்றி யிருக்கிறாள். எனவே பெயர் மட்டுமில்லை. ஆளே மகாலட்சுமிதான்.

☺ ☺ ☺

# கை கழுவுவீர்களா?

'பூரணை முடிந்து நாலுநாள் தான். மனித மனங்களுக்குஞ் சந்திரனுக்குந் தொடர்பு இருப்பதாக யாரோ சொன்னது நினைவு வந்தது. புறப்பட்டு விட்டேன்; முயன்று பார்ப்போம்.' என்று எண்ணிக் கொண்டு ராசர் வீட்டுப் படலையைத்திறந்து கொண்டு, குரல் கொடுத்தேன். முதற் பதிலாக என்னை நோக்கிக் குரைத்து உறுமிக் கொண்டு வந்த நாயை 'பொன்னி, பேசாமற் போ' என்று வெருட்டி விட்டு, 'இது ஒரு நல்ல பிறவி, குட்டியாய் வந்த இடத்திலே அணைத்துச் சாப்பாடு போடுகிறோம்; நல்ல காவல்' என்று சொல்லிக்கொண்டு என்னை அழைத்துச் சென்றார். நாயும் விக்கல் எடுப்பவர்களைப் போல விட்டுவிட்டு 'வெள்வெள்' என்றுகொண்டு விலகிற்று. சால்வையாற் கதிரையை அடித்துத் தூசு தட்டி "ஒரு நிமிஷம் இருங்கோ. இதைக் கட்டி வைத்துவிட்டால் வேலை முடிந்துவிடும். அதிபரையா, அம்மா எல்லாருஞ் சுகமோ?" என்று கேட்டுக்கொண்டே காலை மறு பக்கம் நீட்டி, மேலே வாழை நாரை நீட்டி எறிந்து பக்கத்திலே பிடி பிடியாக அடுக்கி வைத்திருந்த வெற்றிலையை அடுக்காக வைத்து நாரால் இறுக்கிக் கட்டிப் பிள்ளையைத் தூக்கிக் கிடத்துவது போலப் பக்குவமாகப் பக்கத்திற் கிடந்த மூன்று கட்டு வெற்றிலையுடன் சேர்த்து வைத்தார். வாழை உள் மடலைக் காய விட்டு எடுத்த நார் விளக்கு வெளிச்சத்தில் தனி அழகாயிருந்தது. ஏறத்தாழ ஆயிரம் வெற்றிலையை இரண்டுமுழ நீளத்தில் அடுக்கி வழுக்கிக் குலையாமல் தடி போலத் தூக்கிவைத்த கைவண்ணத்தை நயந்து கொண்டிருந்தேன். கடைசிக் கட்டு அது. அடுத்தநாட் காலையில் நாலுகட்டு வெற்றிலையும் தடல் முதுகு கிழித்தெடுத்த முது வாழையிலையிற் கட்டி, பலகைப் பெட்டிபோல லாவகமாகத் வதலையில் வைத்துச் சந்தைக்குக் கொண்டுபோவதை அகக் கண்ணிற் கண்டு கொண்டிருந்தேன். ராசர் உடலைத் துடைத்துக் கொண்டு எழுந்து பக்கத்து வாங்கிலே இருந்தபடி, மூத்தவரின் கடிதங்கள் ஒழுங்காய் வருகிறதோ' என்று கேட்டதுதான் என்னைச் சுய நிலைக்குக் கொண்டுவந்தது. குசலங்களை நீளவிடாமல் விஷயத்துக்கு வர விரும்பி 'நாதோலைக் காணி

வருமானம் எல்லாம் ஊர் கொண்டு போகிறது. "அண்ணன்மார் தங்கைமார் போட்டியிட்டு ஒரே வீட்டுக் காசைச் சட்டத்தரணிமாருக்கு இறைக்கிறீர்கள்" என்று தொடங்கினேன். "அவன்களும் எனது மச்சான் மாதிரி ஆட்களை நம்பித்தானே காசு செலவளித்துப் படித்தவன்கள்" என்று பகிடிவிட்டார் ராசர். "உங்கள் அருமைத் தங்கச்சி தூது விட்டிருக்கிறாவோ அதிபரையாவை? உது கடைசிவரையுஞ் சரிவராது; மாமி இவருக்கும் முதுசம் என்று ஒன்று வேண்டும் என்று சொல்லிக்கொண்டு செத்தவ" என்று முழங்கினாள் செல்லம். "செத்த ஆட்களைச் சாட்சிக்குக் கொண்டு வர வேண்டாம்; கதிரேசர் பாடுபட்டு உழைத்த காசுதான் கரைகிறது இரண்டு பக்கத்திலுமிருந்து; உனக்கு மூன்று காணி சீதனந் தந்தது கொண்ணருஞ் சேர்ந்துதானே. அறளை பேர்ந்த தகப்பனையுங் கமலந்தான் வைத்திருந்து பார்க்கிறாள்; கிழவி தானிருக்கும் வரைத் தனக்கொருபிடி இருக்க வேண்டும் என்று வைத்துக் கொண்டிருக்க ஆமிக்காரனின் ஷெல் வந்து உயிரைக் கொண்டு போகும் என்று நினைத்திருக்கவில்லை" என்று சொன்ன எனக்கு ஏதோ சூடாகச் சொல்ல முயன்ற செல்லத்தை ராசரின் நாக்குக் கடிப்பு அடக்கி விட்டது. 'அந்தக் குடிகாரன் மச்சான்தான்; எங்கள் பரம்பரையில் இல்லாத வேலை; குடிக்கிற செலவுக்கு ஈடுபாடு வைத்து விடுவானே' என்றவருக்கு உங்கள் சகோதரிக்குக் கொடுத்தால் அவர் எப்படி ஈடு வைக்க முடியும்?' என்ற எனது மறுப்பை ஏற்பதுபோல ராசர் தலையாட்டினார். கழிப்பு வெற்றிலை அடுக்கிக் கொண்டிருந்த செல்லம் 'ம்ஹூ, அவள் கதிராசிப் பேத்திக்கு என்ன சொல்லி விட்டவளாம்! அண்ணருக்குச் செல்லங் கொடுத்துக் குடிக்கப் பழக்கிவிட்டு இரகசியமாக வைத்திருந்து தன் தலையிலே கட்டி விட்டோமாம்' என்றவளுக்கு ராசர் 'நீ நாறற் பாக்கும், பிஞ்சுப் பாக்குந் தருவாய் என்றதுக்காகச் சொன்ன உழவாரக் கதை உது; கிழவி போகிற இடமெல்லாம் இப்படித்தான் நாரதர் வேலை பார்க்கிறது. அங்கே மணியம் வீட்டையும்...' சொன்ன ராசரை இடைமறித்து, 'அண்ணர் குடித்தாலும் இவவினுடைய சீதனத்திலேயோ குடிக்கிறார்; சாமம் சாமமாய்ப் பட்டுபனை மிதித்து இறைக்கிற மனிதனுக்குச் சீட்டுக் கீட்டுப் பிடித்தாவது இறைக்கிற மெசின் வாங்கிக் கொடுக்க

மதியில்லை அவளுக்கு. காணிதான் வேணுமாமோ? தங்கையைத் தாக்கியது ராசருக்குச் சுட்டு விட்டது. 'உங்கள் அண்ணன் அவள் கையிலே காசுகிடக்க விட்டால்தானே' என்றொரு போடு போட்டார். 'தங்கச்சி என்றால் தங்கக்கட்டி அவருக்கு' என்று பொருமினாள் செல்லம். நிலைமையைச் சமாளிக்க நினைத்த நான் "அந்த மனிதன் குடியிலழித்தாலும், தங்கைமார் மூன்று பேரையும் மூத்தவள்தானே படிப்பிக்கிறாள் அவள் நல்ல உத்தியோகம். சங்கத்திலே நல்ல மெஷின் வந்திருக்கிறதாம்; மாதம்மாதங் காசு கட்டலாமாம் பார்க்கலாம். அவள் அனுப்புவாள்." என்றதும், செல்லம் எழும்பிவிட்டாள். 'என்ன, எங்க பெரியவன் டொக்டர்; மற்றவன் அக்கௌண்டனாகிவிட்டான். ஏன், இவள் எங்கடை மருமகளளவாவது படித்திருக்கிறாளோ அவள் நந்தினி" நித்திரை குழம்பிய பேரக்குழந்தை வீரிட்டு அழத்தொடங்கி விட்டது. "இவை அவளுக்குக் கொடுத்த சீதனம் போதாதோ. கொழுந்து (வெற்றிலை) செய்கிற தோட்டம், காசு, தலையிலிருந்து கால் பொறுக்க நகை; இவருக்கென்று விட்ட முதுசத்தைக் கைவிட ஏலாது" என்று சொல்லிக்கொண்டே குழந்தையை எடுக்கப் போனாள். ராசர் மூச்சுக் காட்டாமற் பரிதாபமாக என்னைப் பார்த்தார். மச்சாளுடன் ஏற்பட்ட போட்டி மனப்பான்மையே இவை எல்லாவற்றுக்கும் அடிப்படை என்பது எனக்குப் புலனாயிற்று. ராசருக்கு அக்காணியைக் கொடுக்க மறுப்பில்லை. ஆனால் . . . முதலிலே எங்கேயாவது தனியக் கதைத்து அவருக்குத் துணிவு ஏற்படுத்துவோம் என்று எண்ணிக் கொண்டு நானும் எழுந்தேன். என்னை வழிவிடப் படலை வரையும் வந்தபோது கதைக்க எண்ணியபோதும் செல்லம் திரும்பி வந்தாலும் என்ற எண்ணத்திற் பேசாமலே புறப்பட்டு விட்டேன்.

திரும்பிப் போகும்போது மச்சாளிற் கொண்ட எரிச்சல் அவளுடைய பிள்ளைகளிலுமே தாவுகிறதே! நந்தினியின் உத்தியோகச் சிறப்பையும் அவமதிக்கிறாள். செல்லத்துக்கு அவள்மேல், ஏன் மருமக்கள் மேலும் வெறுப்பு வைரம் ஏறுவதற்கு ஒரு காரணம் அவர்கள் நல்ல நிறமானவர்கள். நிறம் மட்டுமல்ல; கல்வித் திறமையும் உண்டு. சீதனங் கேளாமலே யாருங் கொத்திக் கொண்டு

போகக்கூடிய முகவெட்டு. செந்தளிப்பும் உண்டு. கம்பன் கண்டானென்றால், இராமன் முகத்துக்கு உவமை சொல்ல அப்பொழுது அலர்ந்த செந்தாமரையிடம் போயிருக்க மாட்டான். 'மாற்றுக்குமாறு சம்பந்தஞ் செய்வது கூடாது' என்று சோமர் சொல்வது நினைவுக்கு வந்தது. ஏன் எங்கள் பேர்த்தியும் சொல்லு வதுண்டு. அண்ணன் தங்கை மாற்றுக்குமாறும் அண்ணன் தம்பி அக்கா தங்கைத் திருமணமுங் கூடாதாம். இளைய குடும்பந்தான் பாதிக்கப்படுமாம். வெட்டுப்பகையும் வருமாம். எத்தனையோ உதாரணம் எடுத்துக் காட்டுவார்கள். இங்கே, ராசருக்கு இரண்டும் ஆண்பிள்ளைகள்; தங்கைக்கு நாலும் பெண்கள். என்றாலும் படிப்பிலே வலுசுட்டிகள். சீதனக் கரைச்சல் என்றொழிய இந்த நாளில் உத்தியோகம் பார்த்துப் பிழைக்க முடியும். சந்திரன் குடித்தாலும் நல்ல குணமானவன். மற்றவர்களுடன் சோலி சுறட்டுக்குப் போகாதவன். கடவுள் நல்ல வழி காட்டுவார். என்று எண்ணிக் கொண்டு சென்றேன்.

நாள் உருண்டது. ஒருநாள் ராசர் வந்தார். முகத்திலே கவலை நிறைந்திருந்தது. ஆனால் விடிவு கண்ட முகம். கதை ஒன்றும் இல்லை. சிக்கல்களுக்கு முடிவு கண்ட பாவனையில் தலையசைத்த வாறு கடிதம் ஒன்றை நீட்டினார். மகன் எழுதியிருக்கிறாராம். விஷயம் இதுதான்.

"நெடுநாட் குடும்பப் பகையைத் தவிர்க்குங் காலம் வந்து விட்டது. அம்மாதான் சங்கடப் படுவார். அன்று என்மானத்தைக் காத்தவள் நந்தினிதான். மானம் மட்டும் அல்ல. அக்கவுண்டன் என்றபடியால் என் விடுதலைக்கு 50,000ஆவது பிடிக்கும். என்ன இருந்தாலும் பொலிஸ் பட்டியில் நாலைந்து நாள் ஆடுகள் மாதிரி அடைபட்டுக் கிடந்து யாராவது பேரம்பேசி காசுக்கும் வழிகண்டு பிடித்தால்தான் வெளியில் வந்திருக்கலாம். "கோயிலுக்குப் போகிறவர்களையும் சந்தேகம் என்று கைது செய்தது முன்னைய ஆட்சிதான். எல்லாத் தமிழ்ச் சகோதரரையும் புலியாகக் கருதோம் நாங்கள்" என்றார்கள். அது நயவஞ்சகப் பேச்சு என்று நினைக்கவேயில்லை. நம்பிக்கொண்டு எதிர்காலம் பற்றி எத்தனையோ கோட்டை கட்டினோம். தாய்

தங்கைக்காக, முற்பணமும் அநியாய வாடகையுங் கொடாமல், ஊருக்கு அனுப்பலாம் என்ற எண்ணுத்தில் வசதி மரியாதை பாராமல் வாடகை மலிவான விடுதிகளிலே படுத்தெழும்பு கிறார்கள். நானும் கூட்டாளிமாருடன் சேர்ந்திருந்தேன். இப்போது நடுச்சாமத்திலே தமிழரை எழுப்பிக் கொண்டுவந்து காலி வீதியிலே வரிசையாக நிற்கவிட்டு வடிவு பார்க்கிறார்கள். இளம் பெண்பிள்ளை களையும் இரவு உடுப்போடு கொண்டுவந்து விட்டது மட்டுமல்ல. வீடியோவும் எடுக்கிறார்கள். இவை எல்லாம் செய்விப்பதும் பெண்பிள்ளை பெற்ற ஒரு தாய்தான்! காசு தேவைப்படும் போதெல்லாம் காசு மரங்களைப் பிடிப்பார்கள். போன திங்கட்கிழமை அதிகாலை நானும் அந்த நடை பவனியிற் சேர்க்கப்பட்டேன். குளிக்கப் புறப்பட்ட உடுப்போடு. மாவைக்கந்தன் கருணை. எங்கள் நடைபவனியைத் தான் தங்கியிருந்த விடுதியின் மேல் மாடியில் நின்று தற்செயலாகப் பார்த்த நந்தினி என்னைக் கண்டதும் பாய்ந்தோடி வந்துவிட்டாள். அவள் பாதுகாப்பமைச்சிலே கிளைத் தலைமை லிகிதர் என்பது உங்களுக்குத் தெரியுமோ அறியேன். அன்று எங்களுக்கு அணிநடை பழக்கிய இராணுவ அதிகாரி இரண்டுநாள் முன்னர் நந்தினியிடம் அமைச்சு அலுவலகத்தில் ஒரு பெரும் உதவி பெற்றிருந்தாராம். நந்தினி வந்து கேட்கவும் விசாரணை முதலில் முடித்து அனுப்பி விடுகிறேன் என கடத்தல் மறுமொழிதான் சொன்னார். நந்தினி வெட்கத்தையும் மறந்து “அவர் என் உண்மைக் காதலர். அடுத்த மாதந் திருமணம்” என்று அடித்துச் சொல்லிவிட்டாள். என் கண்முன்னே நிகழ்ந்தது இது. உள்ளே பட்டி அடைபடப் போகாமலே தப்பிவிட்டேன். அதற்குமுன் அவ்வழியால் தினந் தோறுஞ் சென்றாலும் அவளைச் சத்தியமாய்த் திரும்பியும்பாராத நான் அவ்விடத்திலேயே விடுதலையாகி மீளும்போது மற்றவர்கள் நிற்பதையும் நினையாமல் நீ அதிகாரிக்குச் சொன்னபடி செய்கிறேன் என்று வாக்களித்து விட்டேன். அதனை அவள் ஏற்கத் தயங்கினாள் என்று நான் சொன்னால் நம்பமாட்டீர்கள். எடுத்தவுடன் ஏன் அப்படிச் சொன்னேன் என்று நானும் பின்னர் யோசித்ததுண்டு. மனம் நிறைந்த நன்றி யுணர்வுதான் காரணம். விபரம் அறிந்த குமார் சித்தப்பாவும் சித்தியுந் தலையிட்டுத்தான் முடிவாயிற்று. அம்மா தன் பிள்ளையை மயக்கிப் போட்டாள் என்று நினைக்கக் கூடும். வெட்கமில்லாமற்

காதலன் என்று சொன்னாள் என்றும் எண்ணுவீர்கள். “அந்தநேரம் அதுதான் ஒரேவழி; அதனாலே சொன்னேனே தவிர, தனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை” என்று குமார்ச் சித்தி கேட்கக் கேட்க அடம் பிடித்திருக்கிறாள். ஒரே குடும்பத்திலே விவாகஞ் செய்வது சந்ததிக்கு நல்லதல்ல என்று ஒருபுத்தகத்தில் வாசித்திருக்கிறாளாம் சித்தப்பா கெஞ்சக் இறுக்கமாகக் கதைத்தபோதுதானாம் பேசாமலிருந்தாளாம். அவள் வெட்கத்தைப் பார்த்திருந்தால், என் அறை நண்பன் வேலும் மயிலும் போலத்தான் இன்னும் அங்கே காய்ந்த பாண் துண்டோடு கிடந்திருப்பேன். அவன் இன்னும் விடுதலையாக வில்லை. வர வர கையூட்டும் ஆயிரக் கணக்கிற் கூடுகிறது. இராணுவ அதிகாரிக்கு அவள் சொன்னது பொய்; என்னைக் காப்பாற்ற. என்றாலும் நான் சொன்னது மனம் நிறைந்த சத்தியவாக்கு; நன்றி உணர்வு. அம்மா, அப்பா உங்களுக்கு இந்தக் கடிதந்தானும் எழுத வைத்த நந்தினியை ஏற்கப் போகிறீர்களா? என்னையுங் கைகழுவுவீர்களா?" என்ற வினாவுடன் கடிதம் முடிவுற்றது.

“கடைசிச் சொல்லுக்கு ஆத்திரப்பட்டாலும் காய்ந்த பாண் துண்டு என்றதும் தாயின் வாயும் அடங்கிக் கிடக்கிறது” என்றார் ராசர்.

**சுப மங்களம்.**



நியூசிலந்தின் வடக்கே உள்ள Auckland நகருக்கு அண்மையில் Muriwai கடற் கரை.

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்

கனடா